# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(தேசிய மறு நிர்ணய தரமதிப்பீட்டுக் குழுவினரால் 'B' தரம் மற்றும் முதல் நிலை பெற்றது)

காரைக்குடி - 630 003.



# ஆண்டு மலர்

# 2022 - 2023

# ஆண்டு மலருக்குள் அடியெடுத்து வைக்கும் முன்

அன்புடையீர்

வணக்கம், காரைச்செடியைக் கட்டழித்துக் காரைக்குடியைக் கல்விக்குடியாய் மாற்றியவர் வள்ளல் அழகப்பர்; மாணவக் கண்மணிகள் அடிப்படைக்கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்விவரை ஓரிடத்தில் படித்து மேன்மைபெற வழிவகுத்த விழுத்தெய்வம்; மானுடச் சமூகத்தின் அறியாமை இருளகற்றிடவும் இன்னல் தீர்த்திடவும் கலங்கரை விளக்காய் நின்ற கொடைஞன். இச்சிறப்புடைய வள்ளலின் கல்வி நிறுவனத்தில் பயின்றவர்கள் பல்வேறு துறைகளில் பெரும்பேர் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இக்கல்வி நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஆற்றல்சார் ஆசிரியப் பெருமக்கள், தங்கள் கடமையைக் கண்ணெனக் கருதிச் செயலாற்றுபவர்கள். இங்கு பயிலும் மாணாக்கர்கள் நல்லொழுக்கமும் நல்லறிவும் மிக்கவர்கள். இவர்களின் படைப்புத்திறனை வெளிக்கொணரும் வகையில் ஒவ்வொரு ஆண்டிலும் இக்கல்லூரியில் ஆண்டுமலர் மலர்கிறது. இவ்வகையில் **2022 - 2023** ஆம் ஆண்டிற்கான ஆண்டுமலரில் மாணாக்கரின் பல்வேறு திறப்பாடுகள் வெளிப்படுகின்றன. அவற்றின் கருத்தாக்கத்தை நுண்ணிதின் நுகர்ந்து அறிவில் மேம்பட்ட புதியதோர் உலகம் படைத்திட உத்வேகம் கொள்ளுங்கள்!

அன்புடன்

**பதிப்பாசிரியர் மற்றும் மலர்க்குழுவினர்**



**2022 - 2023** ஆம் கல்வி ஆண்டின் நம் சாதனைகள், நிகழ்வுகள் பற்றிய ஆண்டறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**1. முதல்வர்**

சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய அ.பெத்தாலெட்சுமி ஆகிய நான் அக்கல்லூரியிலிருந்து இடப்பெயர்வு பெற்று **21.12.2021** முதல் அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகிறேன்.

**2. தேசிய தரவரிசைப் பட்டியல்**

தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு **2022**இன் படி இந்திய கல்லூரிகளுக்கு இடையிலான தரவரிசைப்பட்டியலில் இக்கல்லூரிக்கு **54**ஆவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**3. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் **78** ஆசிரியர்களும், **13** அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களும், **43** முதலாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **34** இரண்டாம் சுழற்சி கௌரவவிரிவுரையாளர்களும், **17** பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். இக்கல்லூரியில் **22** ஆசிரியரல்லாப் பணியாளர்களும், **2** அண்ணாமலைப் பல்கலைக்கழக பணியாளர்களும், **15** பெற்றோர் ஆசிரியர் கழகப் பணியாளர்களுமாக மொத்தம் **224** ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**4. மாணவ, மாணவியர்**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் இளநிலை மற்றும் முதுநிலைப் பாடப்பிரிவுகளில் **2173** மாணவியர்களும், **1188** மாணவர்களுமாக மொத்தம் **3361** மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் உடற்பயிற்சி கூடம் புனரமைப்பு செய்யப்பட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

**5. கல்லூரி அறக்கட்டளை**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் திரு. **வயி. அ. அண்ணாமலைச் செட்டியார்** மற்றும் திருமதி. **அ. அன்னபூரணி ஆச்சி** நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியுடன் (அரசாணை (நிலை) எண். **164** உயர்கல்வி (டி**2**) துறை) **23.08.2022** அன்று நிறுவப்பெற்று, ரூபாய் இரண்டரை லட்சம் முதலீட்டில் கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் இயற்பியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளில் முதல் தரம் பெறும் மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட இருக்கிறது.

**6. முன்னாள் மாணவர்கள் சங்கம் & பெற்றோர் ஆசிரியர் கழகம்**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பழைய மாணவர்கள் சங்கம் **09.05.2022** அன்றும், பெற்றோர் ஆசிரியர் கழகம் **18.02.2023** அன்றும் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

**முன்னாள் மாணவர் சங்கம்**

முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் இக்கல்லூரியில் இருசக்கர வாகன நிறுத்துமிடம், மாணவியர் ஓய்வு அறை, கல்லூரி நுழைவு வாயில் போன்றன புனரமைப்பு செய்யப்பட்டு கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் **1000** மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. கல்லூரியில் கருத்தரங்கு கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**7. இடப்பெயர்வு மற்றும் பணி நியமனம்**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் **ம. துரை** அவர்கள் பரமக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரிக்கு முதல்வர் பொறுப்பு ஆகப்பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். நம் கல்லூரியின் வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **பொ. வெங்கடேசன்** அவர்கள் அரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு இரண்டாம் நிலை முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். மேலும் ஆங்கிலத்துறை

இணைப்பேராசிரியர் முனைவர் **வே. நாகராஜன்** அவர்கள் ஏரியூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு இரண்டாம் நிலை முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இக்கல்லூரியில் உதவியாளராகப் பணியாற்றிய திரு. **ச. சுரேஷ்ராஜன்** அவர்கள் திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

**8. கல்வி உதவித்தொகை**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பயிலும் **1614 BC / MBC / DNC** மாணவ மாணவியர்களுக்கு ரூ.**18,82,299/-** உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது. தமிழ்வழியில் பயிலும் **157** மாணவ, மாணவியர்களுக்கு ரூ. **1,41,300/-** உதவித்தொகை இக்கல்வி ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது. **SC/ST** உதவித்தொகை பெற இக்கல்வி ஆண்டில் **380** மாணவர்கள் விண்ணப்பித்து உள்ளனர். மேலும் **SC/ST** மாணவ, மாணவியர்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கு இணையவழிப் பதிவு நடைபெற்று வருகிறது.

**9. நான் முதல்வன் BFSI மற்றும் TCS-ION பயிற்சித் திட்டம்**

தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் **BFSI** மூலமாக இக்கல்லூரியின் பல்வேறு துறை சார்ந்த **174** மாணவர்களுக்குத் தினமும் பிற்பகல் **3.00** மணி முதல் **4.00** மணி வரை மூன்று பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு, அதற்கான தேர்வும் நடத்தப்பட்டுள்ளது.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் **TCS-ION** நிறுவனத்தால் இணையவழிப் பயிற்சி கொடுக்கப்பட்டு, அந்த நிறுவனத்தால் நடத்தப்பட்ட தேர்வில் **150** கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை மாணவர்கள் பங்கேற்றனர். இதில் **75** மாணவர்கள் தேர்ச்சி பெற்று, **35** மாணவர்களுக்கு **TCS** நிறுவனத்தில் தொலைபேசி வாயிலாக நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, அதில் **10** மாணவர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளன என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரியில் **25.03.2023** அன்று சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மையமும், எம் கல்லூரியும் இணைந்து வேலைவாய்ப்பு முகாமை நடத்தின. இம்முகாமில் **129** தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. அம்முகாமில் **1084** ஆண்களும், **1509** பெண்களும், **41** மாற்றுத்திறனாளிகளும் கலந்துகொண்டனர். இதில் **331** பேர் பணிநியமன ஆணை பெற்றனர் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**10. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம்**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் தமிழ்நாடு அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் **270**க்கும் மேற்பட்ட மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

**11. நிதி ஒதுக்கீடு**

தமிழக அரசின் சிறப்புத் திட்டப் பயன்கள் நிதி ஒதுக்கீட்டில் இயந்திரம் மற்றும் சாதனங்கள் பராமரிப்புக்காகரூ. **20,000/-**மும், ஆய்வக உபகரணங்களுக்காக ரூ. **2,50,000/-** மும், புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ. **2,00,000/-** மும் நம் கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றன. பொதுப்பணித்துறையின் சார்பாக நம் கல்லூரியின் கட்டிடப் பராமரிப்புக்காக ரூ.**5,00,000/-** தமிழக அரசினால் இக்கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித்துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**12. நாற்பெரும் விழா**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் விளையாட்டு விழா **28.03.2023** அன்றும், நுண்கலை மன்ற விழா **29.03.2023** அன்றும், முத்தமிழ் விழா **30.03.2023** அன்றும் மற்றும் **31.03.2023** அன்று கல்லூரி ஆண்டு விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டன.

**13. பிற**

தமிழக அரசு நம் கல்லூரிக்கு **4** ஆய்வகங்கள் கட்டுவதற்கு ரூ. **1** கோடியே **76** லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து **2** வகுப்பறைகள் **15** லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு அதற்குத் தேவையான மாணவர்கள் அமரக்கூடிய இருக்கைகள் வாங்கப்பட்டுள்ளன.

**14. நன்றியுரை**

இக்கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துவரும் தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவிற்கும், மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும், கல்லூரி உள்கட்டமைப்பு வசதி தொடர்பான பணிகளைச் செய்து வரும் பொதுப் பணித் துறையினருக்கும், நகரின் முக்கிய பிரமுகர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இக்கல்லூரியின் பெருமையையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கத் தொடர்ந்து பாடுபட்டுவரும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், மாணவ, மாணவியருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


அழகப்பா அரசு கலைக்கல்லூரி பவளவிழா ஆண்டினை முன்னிட்டு அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் சென்னை **ந. சுப்புரெட்டியார் 100** கல்வி அறக்கட்டளையும் இணைந்து நடத்திய கோடிகொடுத்த கொடைஞனும் தேடிக்கொடுத்த அறிஞனும் என்னும் பொருண்மையில் பன்னாட்டு கருத்தரங்கம் **10.10.2022** மற்றும் **11.10.2022** ஆகிய இருநாட்கள் நடைபெற்றது. இக்கல்லூரிப் பொறுப்பு முதல்வர் பேராசிரியர் **ம. துரை** அவர்கள் கருத்தரங்கத் தொடக்க உரை நிகழ்த்தினார். அழகப்பா பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் **க. ரவி** அவர்கள் கருத்தரங்க நூலினை வெளியிட்டுத் தொடக்க உரை நிகழ்த்தினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் **சு. இராசாராம்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தின் மேனாள் விரிவுரையாளர் முனைவர் **எம்.எஸ். ஸ்ரீலஷ்மி** அவர்கள் கருத்தரங்க ஆய்வுரை நிகழ்த்தினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் **மோ.கோ. கோவைமணி** அவர்கள் நிறைவு விழாவில் கருத்தரங்கச் சிறப்புரை நிகழ்த்தினார். பாரதவாணி இந்தியமொழிகள் நடுவண் நிறுவனத்தின் ஆய்வறிஞர் முனைவர் **க. பசும்பொன்** அவர்கள் கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் அழகப்பா கலைக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் தேசிகனாரின் புதல்வி டாக்டர் தாமரை அவர்கள் ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மதிப்புள்ள நூல்களைத் தமது தந்தையார் நினைவாகக் கல்லூரி நூலகத்திற்கு வழங்கினார். அழகப்பா அரசு கலைக்கல்லூரிப் பவளவிழா ஆண்டினை முன்னிட்டு அழகப்பா அரசு கலைக்கல்லூரியும் தமிழ்நாடு உயர்கல்வி மாநில மன்றமும் அழகப்பா பல்கலைக்கழகம் **ரூசா(2.0)** இணைந்து நடத்திய சுற்றுச்சூழலும் பருவநிலை மாறுபாடும் – தமிழரின் அறிவுசார் மரபுவழிப் பார்வை என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் **21.12.2022** மற்றும் **22.12.2022** ஆகிய இருநாட்கள் அழகப்பா அரசு கலைக்கல்லூரி உமையாள் அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் **அ. பெத்தாலெட்சுமி** அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். அழகப்பா பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் **க. ரவி** அவர்கள் கருத்தரங்க நூலினை வெளியிட்டுத் தொடக்க உரை ஆற்றினார். சிங்கப்பூர் நான்யாங் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் முனைவர் **இராமன் விமலன்** அவர்கள் கருத்தரங்கச் சிறப்புரையினை வழங்கினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் **இரா. குறிஞ்சிவேந்தன்** அவர்கள் கருத்தரங்க உரை நிகழ்த்தினார். கருத்தரங்க நிறைவுவிழாவில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் **வி. திருவள்ளுவன்** அவர்கள் சிறப்புரை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **சு. இராசாராம்** அவர்கள் கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாக அழகப்பா அரசு கலைக்கல்லூரி புவியமைப்பியல் துறைத்தலைவர் **ப. உதயகணேசன்** அவர்களும் அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா.சிதம்பரம்** அவர்களும் அழகப்பா பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் முனைவர் **ஆறு. சரவணக்குமார்** அவர்களும் செயல்பட்டனர். இக்கருத்தரங்கின் இணை ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் பட்ட மாணவர்கள் செல்வன் **செ. தினேஷ்,** செல்வன். **ச. மணிகண்ட ராஜா,** திருமதி **மு. பிரியங்கா** ஆகியோர் செயல்பட்டனர்.

தமிழ் மன்றத் தொடக்கவிழா **09.11.2022** அன்று நடைபெற்றது. இதில் திருவாடானை, அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **மு. பழனியப்பன்** அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்குபெற்றுச் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழ் மன்ற நிறைவு விழா **30.03.2023** அன்று நடைபெற்றது. இதில் கோவில்பட்டி கம்பன் கழகத்தின் செயலாளர் திருமிகு **த. சரவணச்செல்வன்** சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் முதுகலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் **மு.மரகதவல்லி** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இளங்கலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் **க. சொல்லேருழவன்** அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **ச. முருகேசன்,** தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா. சிதம்பரம்** தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **ப.சு. செல்வமீனா** ஆகியோரிடம் தமிழில் இக்கல்வியாண்டில் நால்வர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.










T. Manci
Department : **M.Sc (C.S)**
Year : **I Year**









**வி.வாணிஸ்ரீ**
Department : BCA
Year : II Year

# ஆங்கிலத் துறை

2022 - 2023 ஆம் கல்வியாண்டில் ஆங்கிலத்துறை சார்ந்த **5** பேராசிரியர்கள் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தால் நடத்தப்பட்ட மாநாட்டில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளனர். முதுநிலை ஆங்கிலத்துறை மாணவர்கள் இக்கல்வியாண்டில் ஐந்து தேசிய கருத்தரங்குகளிலும், நான்கு சர்வதேச கருத்தரங்குகளிலும் பங்கேற்றனர்.

## Report on Activities for the Academic Year 2022 - 2023

Students of English Department have brought laurels to our college by winning various competitions held in other colleges. A.S. Nisha (II M.A English) won the second prize in the Spell Bee Contest conducted by Syed Hameedha Arts and Science College, Ramnad on 25.01.2023. S.Kanaga Nila (II M.A English) bagged second prize in the Poetry competition conducted by Syed Hameedha Arts and Science College, Ramnad on 25.01.2023. Mei VijayaRagavan (II M.A English) participated in the quiz contest conducted by Syed Hameedha Arts and Science College, Ramnad on the same day. Anu Roja.D (II M.A English) and Aadhi Sakthi (III B.A English) participated in the quiz on Noble Prize conducted by CECRI on 12.12.2023. Spell Bee Contest was conducted by our English Department in our college on 02.02.2023. Our Students eagerly participated in the event. Dumb Charades, another interesting event was also conducted by our Department on 06.10.2023.

Dr. R. Chandramohan, Former Principal, Sree Sevugan Annamalai Arts College, Devakottai delivered a special lecture on "Golden Ratio" in Literature on 07.03.2023. **Mr. Nalla Thambi,** Translator and Sahitya Academy Award winner visited our English department and interacted with PG students. Students eagerly participated in the interactive session and the speaker enlightened the students on Translation Studies.

### காற்று

எங்கு எதை
தொலைத்ததோ
தெரியவில்லை? ...

யார் கண்ணுக்கும்
தெரியாமல் எதையோ தேடி
தினமும் திரிகிறது!...



**மு. விஜயலக்ஷ்மி**
Department : **B.Com**
Year : **I Year**



### புன்னகை தேசம்

காண்பவர் அனைவரையும்
ரசிக்க வைக்கும் ஒரு சிரிப்பு
இவ்வுலகில் உண்டு எனில்
அது மழலை சிரிப்பு மட்டுமே!!!

**தி. நிவேதா**
Department : **BBA**
Year : **I Year**




**M. MUTHAZHAGU**
Department : **B.Sc (C.S)**
Year : **II Year**

### ஏக்கம்

கூண்டைத் திறக்காவிட்டாலும்
சிறகுகளை வெட்டாதீர்!
சிறகடிக்க வேண்டுமென்ற
ஆசையிலாவது வாழட்டும்!!





**S. Hari Sudha Sharma**
Department : **B.Com**
Year : **I Year**

# இந்தித்துறை

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் இந்தித்துறை மற்றும் நேரு யுவகேந்திரா சார்பாக 28.09.2022 அன்று மதியம் 2.30 மணியளவில் நடத்தப்பெற்ற இந்தி தினவிழாவில் மாணவ / மாணவியர்களுக்குப் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி போன்றவை நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் **"இந்தி மொழியின் அவசியம்"** என்ற தலைப்பில் இந்தித்துறைத்தலைவர் முனைவர் ஆ.ப. நாகமுத்துவேல் அவர்கள் உரையாற்றினார்கள். மாணவி KMS. பார்கவி நன்றி கூறினார்.

**பேச்சுப்போட்டி (இந்தியில்)**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | AR. நிவிதா ஸ்ரீ | I B.A (Eng) | முதல் பரிசு |
| 2. | S. சிந்து | II B.A (Eng) | இரண்டாம் பரிசு |
| 3. | R. ஆர்த்தி | I B.Sc (Chem) | மூன்றாம் பரிசு |




**ஓவியப்போட்டி**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | V. பத்மஜா | I B.Sc (Chem) | முதல் பரிசு |
| 2. | S. சிந்து | II B.A (Eng) | இரண்டாம் பரிசு |
| 3. | N. தியானேஷ் சபரி ராஜா | I B.Com | மூன்றாம் பரிசு |

**கட்டுரைப்போட்டி (இந்தியில்)**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | K. சரவணபாண்டி | I B.A (Eco) | முதல் பரிசு |
| 2. | S. சிந்து | II B.A (Eng) | இரண்டாம் பரிசு |
| 3. | KMS. பார்கவி | III B.Sc (Geo) | மூன்றாம் பரிசு |

**2022 - 2023 ஆம் கல்வியாண்டிற்கான இந்திப் பாடத்தில் முதல் இரண்டு இடம் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.**

**முதலாம் ஆண்டு (இந்தி)**


| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | N. மகேந்திரன் | I B.Sc (Maths) | முதல் பரிசு |
| 2. | V. பத்மஜா | I B.Sc (Chem) | இரண்டாம் பரிசு |

**இரண்டாம் ஆண்டு (இந்தி)**

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பரிசு |
|---|---|---|---|
| 1. | P. சுபீக்ஷா | II BBA | முதல் பரிசு |
| 2. | S. சிந்து | II B.A (Eng) | இரண்டாம் பரிசு |

# வரலாற்றுத்துறை

2022- 2023 ஆம் கல்வியாண்டில் வரலாற்றுத் துறையின் சார்பாக மன்ற தொடக்க விழா மற்றும் முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் விழா 27.10.2022 அன்று நடைபெற்றது. அவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியைச் சார்ந்த முனைவர் ச. நந்தீஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விழாவில் வரலாற்றுத் துறைத் தலைவர், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் அனைவரும் பங்குகொள்ள விழா இனிதே நடைபெற்றது.






**K. Pradeepa**
Department : **BBA**
Year : **I Year**





**P.K. Dhanalakshmi**
Department : **BBA**
Year : **II Year**





**P. Elamathi**
Department : **B.Com**
Year : **I Year**



**K. Gayathiri**
Department : **B.Com**
Year : **I year**

## SWAMI VIVEKANANDA

The man of the nation
with endless devotion...
Sought with passion
the wonderful Compassion...
A leader with head high
made our hearts Cry...
An epitome of Spirituality
making the people with Clarity
A boy of naughtiness
making his peer group with Cheerfulness
A Saint of Courage
with energising heritage...
His Speech at Chicago
became the world wonderful Scenario...
His meditation at Kanyakumari
enlightened the lamp of purity
His words of boldness
made the youngsters courageous.
The faith in him
Vibrated a glorious hym...
His Powerful eyes
Trigger us to praise

**M. Alagu Amirtha**
Department : **BBA**
Year : **II Year**

# பொருளியல் துறை

2022 - 2023 ஆம் கல்வியாண்டில் பொருளியல் துறையில் ஒரு நாள் பன்னாட்டுப் பயிலரங்கமும், வினாடி–வினா போட்டியும் நடத்தப்பெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. மேலும் இத்துறையில் இரண்டு ஆய்வு மாணவர்கள் தங்களது முனைவர் பட்ட முன்வாய்மொழித் தேர்வினை முடித்துள்ளனர். ஒரு ஆய்வு மாணவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

1. 15.11.2022 அன்று பொருளியல் துறை முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி, பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் நடத்தி பரிசளிக்கப்பட்டது.
2. 24.12.2022 அன்று பொருளியல் மன்ற விழா **“இன்று புதிதாய் பிறந்தோம்”** என்ற தலைப்பில் எஸ். ரமேஷ் வருவாய்த்துறை அதிகாரி, தேவகோட்டை அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.
3. **ஒரு நாள் பன்னாட்டுப் பயிலரங்கம்**

   **சிறப்பு விருந்தினர்கள்**

   1. முனைவர். KM. சுப்ரமணியன், இணைப் பேராசிரியர், ஓஹியோ மாகாண பல்கலைக்கழகம் அமெரிக்கா.

   தலைப்பு: **Key Principles for your Professional and personal Success.**

   2. முனைவர். சிவகுமார், இணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி அரியலூர்.

   தலைப்பு: **Career Opportunities for Economics**

   3. முனைவர். J. ரவிதேன்ராஜ், இணைப் பேராசிரியர், இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

   தலைப்பு: **Quiz Programme.**

   மன்ற நிறைவு விழா 13.04.2023ல் நடைபெற்றது.

## மண்ணோடு முத்தமிட

காற்றின் ஓசை என் காதின் ஓரங்களை உரச
என் இரு விழிகளும் திறக்க
விழிகளின் ஒளியினை மேகக் கூட்டங்கள் மறைக்க
மழைச்சாரலோ மண்ணை முத்தமிட
மண் வாசனையோ என்னை மயக்கிட
நீயும் என்னை முத்தமிட்டு கண்ணீர்த்துளிகளை துடைத்திட
இது கனவா நினைவா என்று உணரும் முன்னே
நான் உன்னுள் கலந்தேனே!



**கரு. ஐயப்பன்**
Department : **Botany**
Year : **II Year**

## ஓவியக்கலை

கற்பனை உலகில் ஓவியம் இருக்கும்
நெஞ்சில் நமக்கு காவியம் பிறக்கும்
ஓவியக்கலையில் வண்ணம் சேர்க்கும்
இரு கைகளின் அழகு, இவ்வுலகை மயக்கும்
அழகைப் பார்த்து உலகம் மயங்கும்
அற்புதச் செயலை அழகாய் காட்டும்
ஓவியமாம்....



**சே. லோகேஸ்வரன்**
Department : **Zoology**
Year : **II Year**

## தன் கை

தனியாக போராடுகிறேன் வெற்றி
கிடைக்குமா என்று வருந்தாதே...
நீ தனியாக போராடுவதே
வெற்றி தான்...!

**ரா. நாகராஜன்**
Department : **BBA**
Year : **I Year**

2022 - 2023ஆம் கல்வியாண்டில் வணிகவியல் துறையைச் சார்ந்த 45 மாணவ, மாணவிகள் அழகப்பா பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையேயான கருத்தரங்கில், பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் பரிசினைப் பெற்றனர்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும் அழகப்பா பல்கலைக்கழகமும் இணைந்து தொழில் முனைவோருக்கான கருத்தரங்கம் 02.03.2023 அன்று வணிகவியல் துறையில் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் மூலம் மாணவர்களின் மென்திறனை முன்னேற்றுவதற்காகத் திட்டத்தொகை ரூ.1,25,000/- பெறப்பட்டு, அதற்கான மென்திறன் பயிற்சியானது இக்கல்லூரியின் அனைத்து மாணவ, மாணவியருக்கும், வணிகவியல் துறையின் சார்பாக 10.03.2023 முதல் 31.03.2023 வரை நடத்தப்பட்டது.

### அய்யன் திருவள்ளுவர்



S.Sangeetha
Department : **BBA**
Year : **I Year**





A. Rugadharshini

### சிறைவாசம்

சமூக வலைதளத்தில்
சிக்கித்தவிக்கும்
சகியிடம் கேட்கிறேன்
சிந்தனை பெருக்கவா...?
இல்லை
சிந்தை சிதைக்கவா...?

**இ. நர்மதா**
Department : **BBA**
Year : **I Year**

### தனிமையின் தாகம்

யாரும் இல்லாத பாதையில்
பயணிக்க விரும்புகிறேன்
உறவுகளுடன் அல்ல
உண்மையான உணர்வுகளுடன்...

**கு. லெட்சுமணன்**
Department : **BBA**
Year : **I Year**

### இழப்பு

கல்லைக் கொண்டு நீரை
ஏற்றியது காக்கையினம்
கருவியைக் கொண்டு நீரை
இறக்கியது மனிதயினம்!



**மா. ஆதிநாராயணன்**
Department : **BBA**
Year : **III Year**

### நம்பிக்கை...!

ஒரு சில நேரம் நம் வாழ்க்கை இப்படியே
போய்விடுமோ என்று பயம்...
ஒரு சில நேரம் எல்லாம் கடந்து போய்
விடும் என்று நம்பிக்கை ...

**ச. விக்னேஷ் கண்ணன்**
Department : **BBA**
Year : **I Year**

### அம்மா...!

என் குறைகள் நூறை மறந்தவள்!
எனக்காக தன்னை துறந்தவள்!
அன்பாலே என்னை அளந்தவள்!
மனதாலே என்னை மணந்தவள்!
உன் வருகை என் வரமாய் ஆனதே.!!!

**ர. வர்சா**
Department : **BBA**
Year : **I Year**

# தொழில் நிர்வாகவியல் துறை



2022 - 2023 ஆம் கல்வியாண்டில் தொழில் நிர்வாகவியல் துறை சார்பில் **10.03.2023** அன்று தேசிய கருத்தரங்கம் "**வணிகம் மற்றும் நிர்வாகத்தில் வளர்ந்து வரும் போக்குகள்**" என்ற தலைப்பில் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக மேலாண்மை துறை சார்பில் கல்லூரிகளுக்கு இடையேயான திறன் சார்ந்த போட்டிகளில் தொழில் நிர்வாகவியல் துறை மாணவர்கள் முதல் பரிசும், கேடயமும் பெற்றனர்.

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் தொழில் நிர்வாகவியல் துறை சார்பில் 10.03.2023 வெள்ளிக்கிழமை அன்று வணிகம் மற்றும் நிர்வாகத்தில் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய தலைப்பில் தேசிய மாநாடு நடைபெற்றது.

அழகப்பா பல்கலைக் கழகத்தில் உள்ள எம்பிஏ (சுற்றுலா & ஓட்டல்) மேலாண்மை துறையில் திறன் சார்ந்த போட்டிகள் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்றது. அதில் அழகப்பா அரசு கலைக் கல்லூரி தொழில் நிர்வாகவியல் துறை சார்பில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு போட்டிகளில் வென்று ஒட்டு மொத்த கேடயம் பெற்றனர். இதில் கல்லூரி முதல்வர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

அழகப்பா பல்கலைக் கழகத்தில் உள்ள எம்பிஏ பொது மேலாண்மை துறையில் திறன் சார்ந்த போட்டிகள் பல்கலைக் கழக அளவில் நடைபெற்றன. அதில் அழகப்பா அரசு கலைக் கல்லூரி தொழில் நிர்வாகவியல் துறை சார்பில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு வினாடி வினா போட்டியில் முதல் பரிசு வென்றனர். இதில் கல்லூரி முதல்வர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.



**B. Abarna**
Department : **BBA**
Year : **III Year**




## என் ஆசான்

செந்தமிழ்த்தேனாய் பாடம்
மட்டும் கற்பிக்காமல்
ஒரு தாயைப் போல
வெற்றிப்படியை நோக்கி
பயணிக்க வைப்பவள் என் ஆசான்
தோள் கொடுக்கத் தோழனாக
விடியலை விடிவெள்ளியாக்குபவள் என் ஆசான்
மின்னலைப் போன்று ஒளிர்பவள்
சீறும் சிறுத்தையாய் சிங்கப்
பெண்ணாய் நாளை நமதே
என்று எதிர்காலத்தை நோக்கி
பயணிக்க வைப்பவள் என்ஆசான்

**ரா. ஷாருக்கான்**
Department : **BBA**
Year : **I Year**

**தலைவர் : முனைவர் அ.பொ. தனபாலன் துறைத்தலைவர்**
**மன்ற செயலர் : முனைவர் அ. பாலசுப்ரமணியன் உதவிப் பேராசிரியர்**

கணிதவியல் துறையில் 2022 - 2023 ஆம் கல்வி ஆண்டின் கணிதவியல் மன்ற மாணவர் செயலாளராக R. கார்த்திகேயன் (P.G) மற்றும் K.ஹரிஸ்மா (U.G) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு கணிதவியல் மன்றம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கல்வி ஆண்டில் 22 மாணவர்கள் முதுநிலை வகுப்பிலும் 66 மாணவர்கள் இளநிலை வகுப்பிலும் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

கணிதவியல் துறைத்தலைவர் முனைவர். அ.பொ. தனபாலன் அவர்கள் "INTRODUCTION TO FOURIER SERIES AND VARIOUS TRANSFORMS" என்ற தலைப்பில் கணிதவியல் புத்தகம், ISBN : 978 - 81- 959382-1-6, வெளியிட்டுள்ளார். முனைவர் அ.பொ. தனபாலன், முனைவர் கா. அர்ச்சுனன், முனைவர் கயி. சாத்தப்பன், முனைவர் சித.ராமசாமி ஆகியோர் முறையே ஒன்று, மூன்று, ஒன்று, ஒன்று ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர். திருமதி ம. சண்முகவள்ளி அவர்கள் தமிழ்நாடு ஆசிரியர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நடை பெற்ற “நான் முதல்வன்” புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டார்.

முனைவர் B.செல்லப்பா, முன்னாள் துறைத்தலைவர், மற்றும் முனைவர் கயி. சாத்தப்பன், உதவிப்பேராசிரியர் ஆகியோர் வழிகாட்டுதலின் படி நான்கு மாணவர்கள் கணிதவியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். ஜனவரி 2023, 23 – ஆம் நாள் கணிதவியல் துறைத்தலைவர் தலைமையில் பாரதிதாசன் பல்கலைக்கழக கணிதவியல் பேராசிரியர் (Adjunct Professor) முனைவர் M.மருதை அவர்கள் முதுநிலை மாணவர்களுக்கு "CSIR Problems" என்ற தலைப்பில் CSIR - NET, SLET தேர்வு எழுதுவதற்கு சிறப்புரை ஆற்றி சிறப்பான வழிகாட்டுதல்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார்.

அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி, கணிதவியல் துறையில் பிப்ரவரி 2023, 28 – ஆம் நாள் நடைபெற்ற மாநில அளவிலான வினாடி வினா போட்டியில் முதுநிலை மாணவர்கள் R.கார்த்திகேயன், P.சரவணன் மற்றும் S.சுமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, கணிதவியல் துறையில் 2023 மார்ச் 27ஆம் நாள் நடைபெற்ற மாநில அளவிலான வினாடிவினா போட்டியில் முதுநிலை மாணவர்கள் R.கார்த்திகேயன், P.சரவணன் மற்றும் A.மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கணிதவியல் பேராசிரியர்கள் தலைமையில் துறை அளவிலான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ரங்கோலி மற்றும் கணித வினாடிவினா போட்டிகள் நடத்தப்பட்டன.

கணிதவியல் மன்றவிழா 05.04.2023 அன்று நடைபெற்றது. விழாவிற்கு மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை, கணிதவியல் துறைத்தலைவர் முனைவர் V. முருகன், இணைப்பேராசிரியர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். துறை அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மன்றவிழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**M.Phil Rank List - April / 2022**

அழகப்பா பல்கலைக் கழக தரவரிசை பட்டியலில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மாணவி G.பிரீத்தா இரண்டாம் இடத்தையும், S.சத்தியபாமா மூன்றாம் இடத்தையும், G. அபிநயா நான்காம் இடத்தையும், M.பாண்டீஸ்வரி ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# இயற்பியல் துறை

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் பவளவிழா ஆண்டினை முன்னிட்டு **16.10.2022** அன்று இயற்பியல் துறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடைபெற்றது. இக்கல்வியாண்டில் சுரண்டை அரசு கலைக் கல்லூரி மாணவர்களும், தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசு கலைக்கல்லூரி மாணவர்களும் இத்துறையின் ஆய்வகங்களைப் பயன்படுத்தினர்.

## அப்பா


காற்று போல் நீ என்னுடன்
இருப்பதை உணர்ந்தாலும்
தூரத்தில் மின்னும் நட்சத்திரமாக
கூட பார்க்க இயல வில்லை....

மெத்தையாக இருந்த உன் மார்பு...
ரேகை தேய்ந்தாலும் என் தலை
கோதிய விரல்கள்...
உன் தோளில் என்னை சுமந்த நாட்கள்
மீண்டும் என்னை சுமக்காது
என்று தெரிந்தும் என் முட்டாள்
மனம் கேட்கவில்லை
உன்னையே தேடும் என் கண்கள்
நீ தென்படமாட்டாயா?...
என்று தெரிந்தும் ஓயவில்லை இருந்தாலும்
காத்திருக்கிறேன் நீ வருவாய் என்று....




**மு. முத்தழகு**
Department : **B.Sc., (CS)**
Year : **II Year**



**மனிதனின் மிகச்சிறந்த**
**கண்டுபிடிப்பு புத்தகம்!!**




Art by
**Nivi**




**T. Manci**
Department : **M.Sc (C.S)**
Year : **I Year**



## நேரம் (கடிகாரம்)

பின்னே சுழற்றியும்
பிடிக்க முடியவில்லை
வீணாக்கிய நேரம்,
மீண்டும் முன்னேறிச் செல்கின்றன
முட்கள்...!


**சினேகா. மு**
Department : **BBA**
Year : III Year


## இயற்கைக்குள் வாழ்க்கை

வரும் கஷ்டங்களை கட்டுமரமாக்கி
பட்ட துன்பங்களை துடுப்புகளாக்கி
உள் எழுந்த இலக்கை எண்ணத்தில் ஏற்றினால்
வெற்றி என்னும் கரையை அடைந்துவிடலாம்


**த. திவ்யா**
Department : **BBA**
Year : **II Year**




## மரங்களைத் துதிக்கின்றேன்

ஒரு மயிரிழை வீழ்வதைக்கூட ஏற்றுக்கொள்ளாத
கவரிமான்களைக் கண்டேன் – நீயோ
எத்தனை இலைகளை உதிர்த்தாலும் சோர்வடையாமல்
மீண்டும் மீண்டும் விடாமுயற்சியாய் எழுச்சியுறுகின்றாய்
வாழ்க்கை என்பது வீழ்வதும் எழுவதும் தான் என்று
உணர்த்தும் பிரம்மனின் உன்னத படைப்பே
உன்னை எண்ணி நான் வியக்கின்றேன் மரங்களே
என்றும் உங்களைத் துதிக்கின்றேன்!


**ந. அபிராமி**
Department : **Botany**
Year : **II Year**

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் வேதியியல் துறை மன்றத் துவக்க விழா **16.02.2023** அன்றும், தேசிய அளவிலான கருத்தரங்கு **24.03.2023** அன்றும் உமையாள் கலையரங்கில் நடைபெற்றது. இத்துறையின் பேராசிரியர்களின் வழிகாட்டுதலின்படி **4** ஆராய்ச்சி மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றனர்.

இக்கல்வியாண்டிற்கான வேதியியல் மன்ற விழா 16.02.2023 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் எகழூர், துணைப் பொது மேலாளர் திருமிகு நா.கா. பெரியசாமி என்பார் சிறப்புரையாற்றினார்கள். நம் கல்லூரியின் பவள விழாவினை முன்னிட்டு வேதியியல் துறைசார்பாக ஒருநாள் தேசிய கருத்தரங்கம் சமீபத்தில் வேதியியல் முன்னேற்றம் 2023 எனும் தலைப்பில் 24.03.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பொறுப்பு முதல்வர் முனைவர் ஐ.நிலோபர்பேகம் தலைமையில் மத்திய மின் வேதி ஆய்வக முதன்மை விஞ்ஞானிகள் முனைவர் செ. மதியரசு, முனைவர் ஜேம்ஸ் ஜோஸப், கொச்சின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக கப்பல் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் முனைவர் ஆ. மதியழகன் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக தொழில்துறை வேதியியல் உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ். விசுவநாதன் ஆகியோர் கருத்துரை ஆற்ற துறைத்தலைவர் முனைவர் ரெ. நடராசன் நன்றி கூறினார்.

## உள்ளம் உணரும் உண்மை

வலிகள் இல்லையேல்
வாழ்க்கை இல்லை
தோல்விகள் இல்லையேல்
வெற்றிகள் இல்லை
கனவுகள் இல்லையேல்
கற்பனை இல்லை
தாகம் இல்லையேல்
நீரின் தேவை இல்லை
முதலிடம் இல்லையேல்
முயற்சி இல்லை
முயன்ற மனிதன்
தோற்றதில்லை
இவற்றையெல்லாம் ஏற்றுகொள்ள
மனமில்லையேல்
வாழ்வில் உயர்வில்லை

**ரா. அபிநயா**
Department : **BBA**
Year : **II Year**

## தவறிழைப்பது மனித இயல்பே!

எந்தநேரமும் சரியான நேரத்தைக்
காட்டும் கடிகாரமும் ஒருநாள்
தவறான நேரத்தைக் காட்டிவிடக்கூடும்
தான் இயங்கக்காரணமாக இருந்த
மின்கலம் பழுதடையும் வேளையில்
அதுபோல்தான் மனித மனமும்...!

**பெ. வீரமணி**
Department : **BBA**
Year : **I Year**

## எனது பார்வையில் பாரதி



முத்தமிழ் என்று பெயர்பெற்ற
எங்கள் மூத்த குடியாம் தமிழுக்கு
தவப் புதல்வனாய் வந்தவனே!
கண்ணம்மா செல்லம்மா என்று
என் தமிழ் அன்னையை
கவிதையால் கட்டிப்போட்ட செந்தமிழ்ச் செல்வனும்
நீயே!
எழுச்சி பொங்கும் கவிபலதந்து – தமிழர்
உணர்ச்சியை விடுதலையை நோக்கி தூண்டி
தமிழர் வாழ்வில் மலர்ச்சியை தந்த வள்ளலும்
நீயே!
தமிழின் முத்தாகவும் – எம்
தமிழ் மண்ணின் சொத்தாகவும்
பிறந்த பைந்தமிழ்ச் சிற்பியும்
நீயே!
கவிச்சுவை சொட்டச் சொட்டக் கவிதைகள் தந்து
தமிழை தேன் சுவையென திரித்த பாரதியே!
என்றும் என் பார்வையில்
தமிழுக்கு அரசனும் நீயே!

**M. Hema Sharmili**
Department : **B.Sc., (C.S.)**
Year : **II - Year**

## அம்மாவின் அன்பு!

பிறப்பு, இறப்பு, காதல், வாழ்க்கை
எல்லாம் ஒரு முறை ஆனால்
உன் மீது கொண்ட பாசம் மட்டும்
உன் மகன் சாகும் வரை...

'அம்மா' ...

**ச. விக்னேஷ் கண்ணன்**
Department : **BBA**
Year : **I Year**

# கணினி அறிவியல் துறை

Report on the Activities of Computer Science Department during the Academic year 2022 - 2023.

Department of Computer Science is encouraging the students to participate in various competitions in other colleges. The following is the list of students participated in other Colleges, Events and the Prizes they won.

Seminars / Competitions / Quiz / Paper presentation participated by our Students.

| S.No | NAME | COLLEGE | PROGRAMME | PRIZE |
|---|---|---|---|---|
| 1. | A. HARISH KUMAR | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 2. | T. TAMIL ELAKKIYAN | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 3. | M. HEMA SHARMILI | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 4. | M. HARI PRASANNA | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 5. | S. AJEEM ALI | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 6. | C. RATHI MALAR | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 7. | G. HARIHARA SUDHAN | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |
| 8. | M. MUTHAZHAGU | NYK SIVAGANGA, SWAMI VIVEKANANDA YOUTH CLUB & NSS AGAC, KARAIKUDI | WORK CAMP - 2023 | Appreciation Certificate |


| S.No | NAME | COLLEGE | PROGRAMME | PRIZE |
|---|---|---|---|---|
| 1. | M. SATHAIAH | ALAGAPPA UNIVERSITY | CROSS WORD | FIRST |
| 2. | L. SURYA KUMAR | ALAGAPPA UNIVERSITY | CROSS WORD | SECOND |
| 3. | A. RANJITH | ALAGAPPA UNIVERSITY | FOCUS ON THE TARGET | THIRD |
| 4. | M. SATHAIAH | ALAGAPPA UNIVERSITY | FOCUS ON THE TARGET | THIRD |
| 5. | T. KARTHIKEYAN | J.J. COLLEGE OF ARTS AND SCIENCE | DEBUGGING | SECOND |
| 6. | A. LOGANATHAN | J.J. COLLEGE OF ARTS AND SCIENCE | SURPRISE EVENT | THIRD |
| 7. | K. SIVA SANKARAN | J.J. COLLEGE OF ARTS AND SCIENCE | SURPRISE EVENT | THIRD |
| 8. | B. SIVABALAN | J.J. COLLEGE OF ARTS AND SCIENCE | SURPRISE EVENT | THIRD |
| 9. | S. LAVANYA | YOUTH RED CROSS | MIME | FIRST |
| 10. | V. JEVARANJANI | YOUTH RED CROSS | MIME | FIRST |
| 11. | B. DHARSHINI | YOUTH RED CROSS | MIME | FIRST |
| 12. | M. MUTHAZHAGU | YOUTH RED CROSS | MIME | FIRST |
| 13. | C. RATHIMALAR | YOUTH RED CROSS | MIME | FIRST |
| 14. | A. VAISHNAVI | YOUTH RED CROSS | MIME | FIRST |

## யார் கைகளும் வேண்டாம்...!

அழுதால் என்
கண்ணீரைத் துடைக்க
யார் கைகளும் வேண்டாம்...!
கீழே விழுந்தால்
மேலே தூக்கிவிட
யார் கைகளும் வேண்டாம்...!
மனம் தளரும்போது
தோளில் தட்டிக்கொடுக்க
யார் கைகளும் வேண்டாம்...!
அழுதால்...
கீழே விழுந்தால்...
மனம் தளர்ந்தால்..
என்னை அரவணைக்க
என் தன்னம்பிக்கை
ஒன்றே போதும்...!

**சு. கீர்த்தனா**
Department : **BBA**
Year : **I Year**





# கணினிபயன்பாட்டியல் துறை

அழகப்பா அரசு கலைக் கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறை மன்ற விழா 27.03.2023 பிற்பகல் 2 மணியளவில் கணினி பயன்பாட்டியல் துறை கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமை உரையாற்றினார். கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் பேராசிரியர் **K.C.** சந்திரசேகரன் அவர்கள் துவக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தகவல் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் R. ஆனந்தஜோதி அவர்கள் கலந்து கொண்டு "Advancement in Bio metrics Authentication System using Machine Learning" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முன்னதாக இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி R. சாருமதி அனைவரையும் வரவேற்றார். இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி R. தனலெட்சுமி சிறப்பு விருந்தினரைப் பற்றி அறிமுக உரையாற்றினார். இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி S. நந்தினி நன்றி கூறினார். இவ்விழாவில் துறைத்தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இக்கல்வியாண்டில் அழகப்பா பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட மாநில அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கில் கணினி பயன்பாட்டியல் துறை மூன்றாமாண்டு மாணவி **ஆர்.சாருமதி** போட்டியில் கலந்துகொண்டு முதல் இடத்தையும், மாணவி **எ. ஜாஸ்பர் மெர்லின்** இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

Report on the Activities of Computer Applications Department during the Academic year 2022 - 2023.

Department of Computer Applications is encouraging the students to participate in various competitions in other colleges. The following is the list of students participated in other Colleges, Events and the Prizes they won.

Participation in Seminars / Competitions / Quiz / Paper presentation by our Students.

| S.No | NAME | COLLEGE | PROGRAMME | PRIZE |
|---|---|---|---|---|
| 1. | R. SARUMATHI | ALAGAPPA UNIVERSITY | AS YOU LIKE IT | FIRST |
| 2. | A. JASBER MERLIN | ALAGAPPA UNIVERSITY | TYPING RELAY | SECOND |
| 3. | R. SARUMATHI | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | WOMENS DAY | FIRST |
| 4. | A. MONISHA | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | WOMENS DAY (ART FROM WASTE) | THIRD |
| 5. | R. SARUMATHI | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | WOMENS DAY (ART FROM WASTE) | THIRD |
| 6. | B. MANGAYARKARASI | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | FINE ARTS DAY (RANGOLI) | FIRST |
| 7. | K. MALAVIKA | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | FINE ARTS DAY (RANGOLI) | FIRST |
| 8. | K. ARTHI | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | FINE ARTS DAY | FIRST |
| 9. | K. ARTHI | ALAGAPPA GOVT ARTS COLLEGE KARAIKUDI | MUTHAMIL DAY | FIRST |

**Association Meeting**

Alagappa Botanical Club organized Botany Department Association Meeting on 25.03.2023. Dr. R. Sarala, Associate Professor, Thanthai Periyar Government Arts College, Trichy was the Chief Guest. She addressed on the topic entitled "Entrepreneurial Botany" which was very informative to the students.

**Academic Visits**

UG and PG students visited Alagappa University Science campus on Science day (28.02.2023). The exhibition was organized by Alagappa University, Students benefited in knowledge sharing.

**Field Visits**

II PG students went on an educational tour for vegetation studies to Sathuragiri, Kodaikanal and Sirumalai from 24.09.2022 to 27.09.2022.

III UG students went on an educational tour for vegetation studies to Coimbatore, Ooty and Mudumalai on 12.10.2022, 14.10.2022.

**Department of Activities**

**Exhibit**

Students from various government schools from Sivagangai District visited the Botany Department lab to know the latest avenues in Botany field under the banner of Nanmuthalvan Scheme 27.02.2023.

**Hands on Training**

Hands on training program on Horticulture (Grafting, Air Layering and cutting methods) given on 25.08.2022 for UG Botany Students.

One day hands on training on UV - Spectrophotometer for UG, PG students and research scholars on 24.03.2023.

**National Level Seminar**

One day national level seminar cum workshop on "Botanical Entrepreneurship for Sustainable Livelihood and Opportunities" was organized by PG and Research Department of Botany, Alagappa Government Arts College, Karaikudi held on 08.03.2023.

Staff attended IPR Awareness Program on 07.11.2022.

**Research**

**A. Conferences / Seminar/Workshop**

II Year M.Sc Students B. Rama, S. Ishwarya, K. Gokula Krishnan, N. Archana, R. Rajasivaranjani and III B.Sc student S. Jegadessan have participated in one day State level workshop on Entrepreneurial Opportunites in Plant Sciences, Organized by Department of Botany, Raja Doraisingam Government Arts College Sivagangai on 16.02.2023.

K. Shanthini, Research Scholar, Participated and presented (Oral Presentation) paper in the Two day International Conference on Innovations And Reforms In Higher Education 2022 organized by Alaggapa College of Education, Alagappa University, Karaikudi held on 25th and 26th November 2022. (Guide Dr.N. Komalavalli, Associate Professor and Head of Botany).

K. Shathini, Research Scholar, participated and presented (Oral Presentation) Paper in the Two days National Conference on Phyto Medicine and Nanomaterials In Plant Science (NCPNP 2022) organized by the PG and Research Department of Botany, Holy Cross College, Thiruchirappalli held on 15 and 16th December 2022. (Guide Dr.N. Komalavalli, Associate Professor and Head of Botany).

K. Shathini, Research Scholar, Participated and presented (Oral Presentation) paper in the Two days National Conference on Phytomedicine 2023 organized by Department of Botany, Bharathiyar University held on 05 & 06th January 2023. (Guide Dr. N. Komalavalli, Associate Professor and Head of Botany).

T. Jeevitha, Research Scholar, Participated and presented (Oral Presentation) paper in Two day International Conference on Innovations and Reforms in Higher Education 2022 organized by Alagappa College of Education, Alagappa University, Karaikudi held on 25th and 26th November 2022. (Guide Dr. N. Komalavalli, Associate Professor and Head of Botany).

T. Jeevitha, Research Scholar, Participated and presented (Oral Presentation) Paper in "Two days National Conference on Phyto Medicine and Nanomaterials in Plant Science (NCPNP 2022) organized by the PG and Research Department of Botany, Holy Cross College, Thiruchirappali held on 15 and 16th December 2022.

T. Jeevitha, Research Scholar, Participated and presented (Oral Presentation) paper in the Two days National conference on Phytomedicine 2023 organized by Department of Botany, Bharathiyar University held on 05 & 06th January 2023.

T. Jeevitha, Research Scholar, Participated in one day national workshop on Statistical Analysis For Research Publications Using MS Excel Organized by the Department of Biotechnology & Microbiology, National College, Tiruchirappalli held o 24 march 2023.


**B. Publications**

1. Komalavalli Narayanasamy and Shanthini Karuppiah (2022), Astroethnobotany' in Proceedings of Two day Internationall Conference on **Innovations And Reforms In Higher Education** 2022 organized by Alagappa College of Education, Alagappa University, Karaikudi held on 25th and 26th November 2022.
2. Komallavalli Narayanasamy and Jeevitha Thampiraja (2022), "Astrophytomedicine" in Proceedings of Two day Internation Conference on **Innovations And Reforms In Higher Education** 2022 organized by Alagappa College of Education, Alagappa University, Karaikudi held on 25th and 26th November 2022.
3. Komallavalli Narayanasamy and Sarvinaa Vyshnavi Ponnaiah (2022), Proceeding entitle "Perspectives of Psychological Astrology in third millennium "Two day International Conference on **Innovations and Reforms In Higher Education** 2022 organized by Alagappa College of Education, Alagappa University, Karaikudi held on 25th and 26th November 2022.

## சமநிலை

தோல்விகளைத் தொடுவதால்
துவண்டுபோவதும் இல்லை
வெற்றிகளைத் தழுவினால்
தலைக்கு ஏற்றுவதும் இல்லை
அன்பை அளிப்பதில்
அளவு வேறுபாடும் இல்லை
மற்றவரை மதிப்பதில்
மனக்கசப்பும் இல்லை
கனவில்லா வாழ்க்கை
கைகொடுப்பதும் இல்லை
அறம் இல்லா கனவு
அது தேவையே இல்லை!!!

**த. திவ்யா**
Department : **BBA**
Year : **II Year**




**K. Praveena**
Department : **BBA**
Year : **I Year**

## தமிழரின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு

மானத்தோடு வாழ்ந்தான் தமிழன் – என்பதற்கு
எத்தனையோ ஆதாரம். ஆனால்
வீரத்தோடு வாழ்ந்தான் தமிழன் – என்பதற்கு
ஜல்லிக்கட்டு தான் அடையாளம்...
காளையை அடக்கித்தான் கற்றானா – தமிழன்
காளையை அடக்கித்தானே கன்னியை
பெற்றான் எம்வீரத்தமிழன்...
ஜல்லிக்கட்டு நடத்த துள்ளிக்கிட்டு வாரோம்
தில்லுருந்தா நீயும் மல்லுக்கட்ட வாடா
புள்ளையப்போல் வளத்து கட்டிக்கிட்டு வாரோம்
திமில தொட்டு நீயும் காட்டிட்டு போ வீரம்...
என் அடையாளத்தை உன்னால் அழிக்க முடியாது
முயற்சித்துபார் முடங்கி விடுவாய்!...
வீழ்ந்து விடாத வீரமும் மண்டியிடாத மானமும்
விலைபோகாத குணமும் தான் எங்கள் அடையாளம்
வீரம் போற்றும் ஜல்லிக்கட்டு
தமிழா நீ வென்று காட்டு

**மு. கஜேந்திரன்**
Department : **BBA**
Year : **I Year**

**தலைவர் : பேரா. மூ. போதகுரு துறைத்தலைவர்**
**மன்றசெயலாளர் : முனைவர் கு. சங்கர் பெருமாள்**

அழகப்பா அரசுகலைக்கல்லூரியின் விலங்கியல் துறையில் இக்கல்வியாண்டில் (2022 - 2023) விலங்கியல் மன்றத்தின் தலைவராக பேரா. மூ. போதகுரு அவர்களும் மன்ற செயலாளராக முனைவர் கு. சங்கர் பெருமாள் அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டு திறம்பட செயலாற்றினார்கள். இம்மன்றத்தின் செயலாளராக செல்வி ந. புவனேஸ்வரி இணைச் செயலாளர்களாக எம். வசந்த லெட்சுமி, உமையாள் மீனாட்சி, ராசிகா மற்றும் எஸ். சுகைனா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். விலங்கியல் மன்ற விழா 21.10.2022 அன்று நடைபெற்றது. மன்ற விழாவில் அழகப்பா பல்கலைக்கழக பயோ எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் பயோ சென்சார் துறையின் பேராசிரியர். வி. தருமன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மருத்துவ துறையில் பயோ சென்சாரின் பங்கினையும் அதன் நன்மைகளையும் பற்றி விளக்கி கூறினார்கள். இணைச் செயலாளர் M. உமையாள் மீனாட்சி நன்றி கூற விழா இனிதே முடிவுபெற்றது.

முதுநிலை முதலாமாண்டு மாணவர்கள் மற்றும் துறைபேராசிரியர் முனைவர். எஸ்.எஸ்.என். சோமசுந்தரம் அவர்கள் 28.02.2023 அன்று குன்றக்குடி வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு சென்று பல்வேறு ஆராய்ச்சி பற்றிய விவரங்களை சேகரித்து பயனடைந்தனர். மேலும் இளநிலை மூன்றாமாண்டு மாணவர்கள், துறை பேராசிரியர் மற்றும் தலைவர் மூ. போதகுரு அவர்கள் 03.04.2023 அன்று கொல்லங்குடி ஊரணியில் உள்ள குளத்தில் பல்வேறு வகையான நீர்வாழ்பூச்சிகளை பற்றி விவாதித்து பயனடைந்தனர்.

## புதிய வாழ்வு.

புதிதாய் பூத்திருந்த பூக்களை தேடும்
தேனீக்கள் போல்...
நம் வாழ்வில் புதிதாய் பிறந்த வருடத்தில்
பொங்கலை போன்று நம் மகிழ்ச்சிகள்
பொங்கட்டும்...
இருளை அகற்றும் கார்த்திகை போல்
நம் துன்பங்கள் விலகட்டும்... (மறையட்டும்)
தீபாவளி போன்ற நம் புகழ்
நாடெல்லாம் சிதறட்டும்
புதிய வருடத்தில் புன்னகையில் மலர்வோம்
புதிதாய் ஒரு பாதை!!
புதிதாய் ஒரு பயணம்!!
நட்பென்னும் தோப்புக்குள்!!!
வாழ்க்கை வாழட்டும்!! வளரட்டும்!!
ஜாதி என்னும் சாக்கடையை
துப்புரப்படுத்தி விடு...
மதம் என்னும்
மனநோயை விட்டுவிடு
தாய், தந்தை என்ற இரு தெய்வத்தை
வழிபடு...
இதை கடைபிடித்தால் நீயே...
இந்த உலகில்
சிறந்த மனிதன்



**பெ. சாமுவேல்**
Department : **Zoology**
Year : **II Year**

## கால கருவறையில் என் கனவுகள்

கண்கள் விழித்து கரைந்தாலும்
இமைகள் இமைத்து கல்லாகிறதே... இந்த கனவு
நாட்காட்டியும் நகர்ந்து செல்கிறதே...!
அதனை நண்பனாக்க எண்ணியதாலோ...?
எழுதுகோலில் எழுதும் எழுத்துக்களும்
என்னை ஏமாற்றத்தான் செய்கிறது...!
கண்களில் தவழும் தண்ணீரும் தரையில்
தவழ்ந்ததால் கண்ணீர் ஆனதே...!
வரிகளால் வரைந்த ஓவியமும் வண்ணம் கேட்குதே...!
மிதவையில்லாமல் மிதப்பதற்கு காரணம் இந்த கனவா...?
காலடிகள் மறைந்தாலும் என் கனவுகளின்
காயங்கள் மறைவதில்லையே...!
காலமும் காவலனாகி என் கனவுகளை கருவறையில்
பூட்டினாலும்...!
கள்ள சாவி கொண்டு என் கனவுகளை கடத்தி
விடுவேன்... கள்வனாக!

**பா. நாகர்ஜுன்**
Department : **Botany**
Year : **III Year**



# புவியமைப்பியல் துறை

2022 - 2023ஆம் கல்வியாண்டில் புவியமைப்பியல் துறைத்தலைவர் முனைவர். **ப. உதயகணேசன்** அவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூர் மாவட்டத்தில் **16.10.2022** அன்று நடைபெற்ற **"Geo India 2022 South Asia Geoscience Exhibition**இல் கலந்துகொண்டார். இத்துறையின் மூலம் ஆறு பன்னாட்டு ஆய்வுக் கட்டுரைகளும் மற்றும் ஒரு தேசிய ஆய்வுக் கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளன. சிறப்பு அழைப்பாளர்களைக் கொண்டு ஒன்பது சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன. ஒருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். முனைவர் **பஞ்சநாதம்** ஹைதராபாத் இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் பட்டயப் பயிற்சி பெற்றுள்ளார். **04.07.2022** முதல் **10.07.2022** வரை அகமதாபாத்தில் உள்ள பௌதிக ஆராய்ச்சி ஆய்வகத்தில் நடைபெற்ற பட்டயப் பயிற்சியில் இத்துறை ஆராய்ச்சி மாணவர் **செ. தினேஷ்** கலந்துகொண்டார்.

1. 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் மாணவ மாணவியர்க்கு துறைசார்ந்த சிறப்பு விரிவுரையாக குவைத்தில் ஆராய்ச்சி விஞ்ஞானியாக பணியாற்றும் இத்துறையின் முன்னாள் மாணவர் முனைவர். ச. சிதம்பரம் அவர்கள், மெய்நிகர் நீர் வர்த்தகம் மற்றும் போக்கு (Virtual Water : trade & trend) பற்றி எடுத்துரைத்தார்.

2. மாணவ மாணவியர்க்கு, மத்திய மற்றும் மாநில தேர்வுகளுக்கு தயாராவது பற்றி தமிழ் நாடு பொதுப்பணி துறையில் உதவி புவியியலாளராகப் பணியாற்றும் இத்துறையின் முன்னாள் மாணவி திருமதி. ம. சுவேதா அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

3. 03.06.2022 அன்று இத்துறையின் முன்னாள் மாணவரான நல்லாசிரியர் மெ. செயம்கொண்டான் அவர்கள் மாணவ மாணவிகளுக்கு "வையத்தலைமைகொள்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

4. 06.09.2022 அன்று நீர் நிலைகளின் மேலாண்மையின் – நிகழ்காலம் மற்றும் எதிர்வரும் காலத்தில் எவ்வாறு இருக்கும் என்று இத்துறையின் முன்னாள் மாணவரான முனைவர் S. சுரேஷ் மத்திய நிலத்தடி நீர் வாரிய நிர்வாக இயக்குனர் (ஓய்வு), விளக்கவுரை வழங்கினார்.

5. இக்கல்வியாண்டில் புவியமைப்பியல் துறையில் முனைவர் ப. உதயகணேசன் அவர்களின் மேற்பார்வையில் திரு.ந. சிவகரூன், ஆய்வியல் நிறைஞர் பட்டம் (21.10.2022) பெற்றுள்ளார்.

6. 10.01.2023 முதல் 12.01.2023 வரை இந்திய புவியியல் ஆய்வுமையம், ஹைதராபாத் நடத்திய ஒருங்கிணைந்த வரைபடம் தயாரிக்கும் நுட்பங்கள் பற்றிய நிகழ்நிலை பயிற்சியில் முதுநிலை மாணவ மாணவியர்கள் பங்கு பெற்றனர்.

7. 01.02.2023 அன்று தமிழ்நாடு கடல் வாரிய துணைத்தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி & இத்துறையின் முன்னாள் மாணவருமாகிய திரு.ச. நடராஜன் (இ.ப.அ)., அவர்கள், Wish it, Plan it, Do it" என்னும் தலைப்பில் மாணவ மாணவியருடன் உரையாடினார்.

8. 16.02.2023 அன்று இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் (IIT) பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற முனைவர் ஆர்.எம். மாணிக்க வாசகம் அவர்கள் "உருமாறிய பாறைகள்" பற்றி இளநிலை மற்றும் முதுநிலை மாணவ மாணவியர்களுக்கு வகுப்பெடுத்தார்.

9. புவியமைப்பியல் துறையில் இருந்து ஆறு பன்னாட்டு ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் ஒரு தேசிய ஆய்வு கட்டுரை முனைவர் ப. உதயகணேசன் இணைப்பேராசிரியர், ரா. ரஜினி கௌரவ விரிவுரையாளர் மற்றும் திரு. செ. தினேஷ் ஆராய்ச்சி மாணவர் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

10. 04.07.2022 முதல் 10.07.2022 வரை அகமதாபாத்தில் உள்ள பௌதிக ஆராய்ச்சி ஆய்வகத்தில் "Astro Chemistry & Cratering in Solar system" பற்றிய பட்டயப் பயிற்சியில் இத்துறையின் ஆராய்ச்சி மாணவர் திரு.செ. தினேஷ் கலந்து கொண்டார்.

11. 22.08.2022 முதல் 27.08.2022 வரை இந்திய புவியியல் ஆய்வு மையம், ஹைதராபாத் நடத்திய ஒருங்கிணைந்த உருமாறிய பாறைகளின் வரைபடம் தயார்செய்வது பற்றிய பட்டயப்பயிற்சியில் இத்துறையின் பா.பஞ்சநாதம், கௌரவ விரிவுரையாளர் பங்கேற்றார்.

12. 10.10.2022 முதல் 11.10.2022 வரை தமிழ்த் துறையால் நடத்தப்பட்ட “கோடி கொடுத்த கொடைஞனும், தேடிக்கொடுத்த அறிஞனும்” என்ற பன்னாட்டு கருத்தரங்கில் முனைவர். ப. உதயகணேசன், முனைவர். சொ. கார்த்திகேயன், முனைவர் ச. இராஜ்மோகன், முனைவர் ர. ரஜனி, திரு.பா. பஞ்சநாதம், திரு.ம. சரவணக்குமார் மற்றும் முனைவர் ஜெ. எட்வின் ஜெபகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கருத்தரங்கம் :**

1. “சுற்றுச்சூழலும் பருவநிலை மாறுபாடும்; தமிழரின் அறிவு சார் மரபுவழிப்பார்வை” என்ற பன்னாட்டு கருத்தரங்கம் புவியமைப்பியல் மற்றும் தமிழ்த் துறையால் முனைவர் ப. உதயகணேசன் மற்றும் முனைவர் மா. சிதம்பரம் ஆகியோரால் 21.12.2022 முதல் 22.12.2022 வரை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

2. முனைவர் ப. உதயகணேசன் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் ஆசிரியர் பணி மேம்பாட்டு குழு உறுப்பினராக 28.12.2022 அன்று சேலம், அரசு ஆண்கள் கலைக்கல்லூரிக்கும், 08.03.2023 அன்று தூத்துக்குடி, வ.உ.சி கல்லூரிக்கும் சென்றுள்ளார்.

3. முனைவர் ப. உதயகணேசன் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் 07.03.2023 அன்று திருநெல்வேலி இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி புவியமைப்பியல் துறையின், மாணவியர் மன்றத்தின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## வித்திட்டவன்...!

விதைத்தவை எல்லாம்
விளைந்திடுமா...?
அப்படி
விளைந்தால் தான்
அவை எல்லாம்
விற்பனைக்கு வந்து
சேர்ந்திடுமா...?
வந்து சேர்ந்தவைக்கு
நியாய விலை கிடைத்திடுமா...?
இல்லை
நியாய விலைக்கடையில்
விதி நிற்க வைத்துவிடுமா...?
என்ற
எந்த விவரமும் அறியாமல்
வியர்வை சிந்தி உழைக்கின்றான்
விவசாயி...!


**க. விஷ்வா**
Department : **BBA**
Year : **I Year**

## வரம்...!

பிள்ளை வரம் கேட்டு
கோவில் கோவிலாய் அலையும்
மக்களுக்கு தெரிவதில்லை...

பல பிள்ளைகள்
பெற்றோர் வரம் கேட்டு
அனாதை இல்லத்தில் இருப்பது.!

**சோ. நாச்சியப்பன்**
Department : **BBA**
Year : **II Year**




**R. Harini**
Department : **BBA**
Year : **I Year**




**C. Rithika**
Department : **BBA**
Year : **III Year**

# உடற்கல்வித் துறை

நம் கல்லூரியின் உடற்கல்வித்துறை, பேராசிரியர்களையும், மாணவ, மாணவியர்களையும் கொண்ட விளையாட்டு ஆலோசனைக் குழுவை அமைத்து அதன் ஆலோசனைப்படி செயல்பட்டு வருகிறது. இக்குழு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தையும், ஏனைய பணிகளையும் ஆய்ந்து மாணவ, மாணவியர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அறிவுரைகள் வழங்கி வருகிறது.

2022-2023 ஆம் கல்வியாண்டில் மாநில அணியில் நமது கல்லூரியிலிருந்து 3 வீரர்கள், அகில இந்திய போட்டிகளுக்கு 15 வீரர்களும், பல்கலைக்கழக அணியில் 45 வீரர்களும், மாநில அளவிலான போட்டிகளுக்கு 5 வீரர்களும் தேர்வு செய்யப்பட்டு போட்டிகளில் கலந்து கொண்டனர்.

**அழகப்பா பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் நமது அழகப்பா அரசு கலைக்கல்லூரி அணியினர் கீழ்க்கண்ட போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.**

| வ. எண். | போட்டியின் பெயர் | இடம் |
|---|---|---|
| 1. | பெண்கள் சதுரங்கம் (Chess) | முதலிடம் |
| 2. | பெண்கள் இறகுப்பந்து (Badminton) | முதலிடம் |
| 3. | பெண்கள் கால்பந்து (Foot Ball) | இரண்டாமிடம் |
| 4. | பெண்கள் ஹாக்கி (Hockey) | இரண்டாமிடம் |
| 5. | பெண்கள் கிரிக்கெட் (Cricket) | இரண்டாமிடம் |
| 6. | பெண்கள் கைப்பந்து (Hand Ball) | இரண்டாமிடம் |
| 7. | பெண்கள் கையுந்து பந்து (Volley Ball) | இரண்டாமிடம் |
| 8. | பெண்கள் (Cross Country) | இரண்டாமிடம் |
| 9. | பெண்கள் பூப்பந்து (Ball Badminton) | மூன்றாமிடம் |
| 10. | ஆண்கள் சதுரங்கம் (Chess) | இரண்டாமிடம் |
| 11. | ஆண்கள் பூப்பந்து (Ball Badminton) | இரண்டாமிடம் |
| 12. | ஆண்கள் கிரிக்கெட் (Cricket) | மூன்றாமிடம் |
| 13. | ஆண்கள் கபடி (Kabaddi) | மூன்றாமிடம் |
| 14. | ஆண்கள் ஹாக்கி (Hockey) | மூன்றாமிடம் |
| 15. | ஆண்கள் கால்பந்து (Foot Ball) | மூன்றாமிடம் |
| 16. | ஆண்கள் கோ கோ (Kho Kho) | மூன்றாமிடம் |
| 17. | ஆண்கள் இறகுப்பந்து (Badminton) | மூன்றாமிடம் |
| 18. | ஆண்கள் கைப்பந்து (Hand Ball) | நான்காமிடம் |




நமது அழகப்பா அரசு கலைக்கல்லூரி ஆண்கள் கிரிக்கெட் அணியினர் சிவகங்கை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்ட ‘C’ பிரிவு கிரிக்கெட் லீக் போட்டிகளில் மொத்த 10 ஆட்டங்களில் 9 ஆட்டங்கள் வெற்றி பெற்று கோப்பையை வென்றனர். இதன் மூலம் நடைபெற இருக்கும் ‘B’ பிரிவு கிரிக்கெட் லீக் போட்டிக்கு நமது கல்லூரி ஆண்கள் கிரிக்கெட் அணியினர் தகுதி பெற்றுள்ளனர்.

தமிழக ஹாக்கி (Under 18) அணிக்கு நமது கல்லூரியின் முதலாமாண்டு இளங்கலை வணிகவியல் மாணவர் M. சங்கர், முதலாமாண்டு இளங்கலை தொழில் நிர்வாகவியல் மாணவர் S. ஹரிஹரன் மற்றும் முதலாமாண்டு இளங்கலை வணிகவியல் பயிலும் மாணவி K. சந்தியா ஆகிய மூவரும் தமிழக ஹாக்கி (Under 18) அணிக்கு தேர்வு செய்யப்பட்டு முதலாவது இந்தியா ஹாக்கி யூனிட் தென்மண்டல (Under 18) ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியானது தமிழ்நாடு ஹாக்கி யூனிட்டால் இராமநாதபுரம் SDAT Stadium வேலு மாணிக்கம் செயற்கை இழை மைதானத்தில் 19.03.2023 முதல் 28.03.2023 வரை நடைபெற்ற தென்மண்டல (Under 18) ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகளில் தமிழக அணியின் சார்பாக கலந்து கொண்டனர். இதில் ஆண்கள் தமிழக ஹாக்கி அணியினர் முதலாவது இடமும், பெண்கள் தமிழக ஹாக்கி அணியினர் இரண்டாவது இடமும் பெற்றது கூடுதல் சிறப்பாகும்.


28.03.2023 அன்று நடைபெற்ற 75வது கல்லூரி விளையாட்டு விழாவில் குழு விளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையை மூன்றாமாண்டு மாணவ, மாணவியர் அணி வென்றனர். தடகள தனிநபர் சாம்பியனாக ஆண்கள் பிரிவில் மூன்றாமாண்டு இளங்கலை இயற்பியல் மாணவ K. பிரியதர்ஷன், பெண்கள் பிரிவில் மூன்றாமாண்டு இளங்கலை ஆங்கிலம் மாணவி P. முத்துலெட்சுமி ஆகிய இருவரும் வெற்றி பெற்றனர்.





# உடற்கல்வித் துறை

## *All India Level Participation 2022-2023*




**K. PRIYADHARSAN**
III B.Sc PHYSICS
**ATHLETICS**




**V. SELVANAVEEN**
II B.COM
**ROLLER SKETES**




**K. MANIMEGALAI**
I B.A ENGLISH
**CROSS COUNTRY**




**K. ABINESH SHARMA**
III B.Sc GEOLOGY
**TAEKWONDO**



**S. MOTHILAL**
III B.Sc MATHS
**BALL BADMINTON**



**S. SIVA THURAI**
II B.B.A
**BALL BADMINTON**



**C. SELVA KUMAR**
III B.Sc BOTANY
**BALL BADMINTON**



**S. DEEPA**
II M.Sc CHEMISTRY
**BALL BADMINTON**



**P. SRIVIDHYA**
I M.Sc GEOLOGY
**KARATE**



**P. MUTHU LAKSHMI**
III B.A ENGLISH
**JUDO**



**M. SOWMIYA**
III B.A HISTORY
**JUDO**



**S. AMOGA**
II B.A ENGLISH
**BOXING**



**T. DHANUSHA**
II B.Sc SCI
**BOXING**



**V. PRAGATHY**
II B.Sc MATHS
**BOXING**



**M. MARUVARASI**
II B.Sc ZOOLOGY
**BOXING**

அழகப்பா அரசு கலைக் கல்லூரி நூலகத்தின் வாயிலாக **2022 - 2023** ஆம் கல்வியாண்டில் சுமார் ரூ. **2,00,000.00** மதிப்புத் தொகையில் **698** புத்தகங்கள் வாங்கப்பெற்று அவை இக்கல்லூரியிலுள்ள அனைத்துத் துறைசார்ந்த நூலகங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்கள் தங்கள் துறை சார்ந்த புதுத் தகவல்களை தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக **N_LIST** என்ற இணையவழி பருவ இதழ்களுக்கான **2023 - 2024** ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ.**5,900.00** (ஐயாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்) செலுத்தி புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் போட்டித் தேர்வுகளுக்குத் தங்களைத் தயார்படுத்தும் பொருட்டு நாளிதழ், பருவ இதழ்கள் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நூலகத்தைக் கணினிமயமாக்கும் பொருட்டு புதிதாக நூலக மென்பொருள் பொருத்தப்பட்டு அதுசார்ந்த பணிகள் நடைபெற்று வருகிறது. ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக இணைய வழி பயன்பாட்டிற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

# அன்று - இன்று

சுதந்திரப் பறவையைக்
கூண்டில் இட்டோம்
பறவைக் கூட்டைக் களைத்து
அடுக்கு மாடி அமைத்தோம்
புல்லாங்குழலின் ஓசை சுவையானது அன்று
அவசர ஊர்தியின் ஓசை இசையானது இன்று
கல்விக்குக் கண்தந்தார் காமராசர் அன்று
கைபேசியின் தாக்கத்தால் கண்இல்லையே
யார் தருவார் கண் தானம் இன்று
கூட்டாக இருந்தது குடும்பம் அன்று
இன்று கூட்டி எண்ணலாம் குடும்பம் எத்தனை என்று
கனவு காணுங்கள் என்று கூறினார் கலாம் அன்று
கைப்பேசியை விட்டு நிமிர்ந்து பாருங்கள் என்று
கூற வேண்டிய காலம் இன்று
தொலை துரத்தில் பார்த்தாலும்
சிட்டுக்குருவிகள் தெரியும் அன்று
கைப்பேசியின் அலைவீச்சால் தேடியும்
கிடைக்கவில்லை குருவிகள் இன்று
அனைவரிடத்திலும் ஒற்றுமை இருந்தது அன்று
எல்லோரும் வேற்றுமையுடன் இருக்கிறார்கள் இன்று
அவமானங்கள் நமக்குப் புதிதல்ல
ஒருபோதும் அது நமக்கு நிலையல்ல
முயற்சியை ஒரு மூச்சாய் கொள்வோம்
நாமும் இவ்வுலகில் ஒருநாள் வெல்வோம்
உயிர்களை மதிக்கக் கற்றுக் கொள்
அன்றைய சூழலை இன்றைக்கு கொண்டு வருவோம்
அனைவரும் ஒன்றாக நின்று!


**கு. ஸ்ரீமதி**
Department : **Tamil**
Year : **I Year**



# நினைவுகள்

கொண்டாட்டத்துடன் தொடங்கவில்லை
கொரோனாவுடன் தொடங்கியதுதான்
எங்கள் கல்லூரி கனவுகள் எல்லாம்
வாழ்வின் ஒரு பெரும் பாலம்
பூட்டிக் கிடந்தது நெடுங்காலம்
இணையத்தில் இணைந்திருந்த தோழர்களின்
இதயங்களை இணைப்பதற்காக
கட்டுப்பாடுகளுடன் கதவுகள் திறந்தது ஒருநாள்
எதிர்பார்ப்புகள் நிறைந்த கல்லூரியின் முதல்நாள்
தோழர் கூட்டம் புதிதாய் கிடைத்தது
தொய்வுகள் இன்றி நாட்கள் தொடர்ந்தது
அரைநாள் பொழுதே கல்லூரி நேரம்
அதுவும் கழியும் ஜன்னலின் ஓரம்
ஆசானிடம் ஆயிரம் கற்றோம்
அறியாத விடைகளை அரியரில் கற்றோம்
கட்டடித்துச் சென்ற வகுப்புகளுக்காக
கைகட்டி வெளியே நின்றோம்
இருந்தும் ஒவ்வொரு நாளும் புதிதாய் பிறந்தது
கல்லூரி நினைவுகள் பூவாய் மலர்ந்தது இன்றோ!
மூன்றாண்டு காலம் முழுதாய் முடிந்தது
மலர்ந்த நினைவுகள் காற்றில் கரைந்தது
இப்படிக்கு,
காற்றில் கரையும் கல்லூரி நினைவுகளை
கண்ணீர்த் துளிகளுடன் கண்டு ரசிக்கும்
ஒரு கல்லூரி மாணவன்

**க. சக்திவேல்**
Department : **Chemistry**
Year : **III Year**



## தேசிய மாணவர் படை

மதுரை இடையபட்டியில் **24.08.2022** முதல் **04.09.2022** வரை நடைபெற்ற **(EPSP)** தேசிய அளவிலான முகாமில் நம் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவன் **கே. செந்தில்** (வணிகவியல் துறை), தேசிய மாணவர் படை திருச்சி குரூப்பில் பெட்டாலியனுக்கிடையே நடைபெற்ற ஆர்.டி.சி. முகாமில் **என். அஞ்சனாதேவி** (தமிழ்த்துறை), **எஸ். மகிலா** (இயற்பியல்துறை), **ப. கணேஷ்பாண்டியன்** (கணினி அறிவியல் துறை) ஆகியோர் கலந்துகொண்டனர்.

அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வி கல்லூரியில் நடைபெற்ற டி.எஸ்.சி. துப்பாக்கி சுடுதல் போட்டியில் தமிழ்த்துறையைச் சார்ந்த தேசிய மாணவர் படை மாணவி **என். அஞ்சனாதேவி** கலந்துகொண்டு பெருமை சேர்த்துள்ளார். நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவி **எஸ். ஷாலினி** துப்பாக்கி சுடும் முகாமில் மார்ச் **13** முதல் **20** வரை கலந்துகொண்டு இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இக்கல்வியாண்டில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் **5** பேர் செகந்திராபாத்தில் நடைபெற்ற **Army Attachment** முகாமில் கலந்துகொண்டு நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மதுரை இடையபட்டியில் நடைபெற்ற **(9TN)** தமிழ்நாடு பெட்டாலியன் சார்பாகக் கல்லூரிகளுக்கு இடையேயான பல்வேறு விதமான போட்டிகளில் நம் தேசிய மாணவர் படை மாணவர்கள் முதலிடம் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

தேசிய மாணவர் படை மாணவி **எம். ஸ்ரீநிஜிதா** புதுடெல்லி ராஜ்பாத்தில் நடைபெற்ற **74** வது குடியரசு தினவிழா அணிவகுப்பில் முதல் பெண் மாணவியாகக் கலந்துகொண்டு நமது கல்லூரி மற்றும் காரைக்குடி **(9TN)** தமிழ்நாடு பெட்டாலியன் வரலாற்றில் பெருமை தேடித் தந்துள்ளார்.

## விடியலில் தேடல்

விடியல் விடியவில்லையென்றால்
வீணாகி விடும்! உனது தேடல்!
தேடல் இல்லையென்றால்
விடிந்த விடியலும் கூட வீணாகிவிடும்
குயிலோ, குருவியோ உன்னை
தூங்கவிடவில்லை ஏன்?
அதற்கு விடிந்து விட்டது
உனக்கு விடியவில்லை அதனால் தான்
தேடுவதை தேடிக்கொண்டிருந்தால்
அந்த விடியலும் கூட உனக்கு உதவும்
தேடுவதை நிறுத்திவிட்டால்
இரவில் நிழலும் கூட விட்டு விலகும்
தேடுவதற்கு பாதையில்லையென்றால்
தேடிய பயணம் காத்திருக்கும்!
இல்லாத பாதையை நீ அமைத்துவிட்டால்
பயணத்தை முடிக்க உனக்கு துணிவிருக்கும்
விடியல் கூட சிறு கஷ்டம்
தூக்கத்தில் எழுவதற்கு!
அந்த கஷ்டத்தை இஷ்டமாக்கினால்
அதுவே உனக்கு லாபம்
விடியும் முன் உள்ள தேடல்
ஒரு கனவாகும் – அதே
தேடல் விடிந்த பின் நிஜமாகும்.
(தேடுவதில் தேய்ந்துப்போனால்
தொலைவது நீயாவாய்
தேய்ந்துப் போனாலும் தேடினால்
வெல்வது நீயாவாய்)
இருளில் கிடைக்காத பாதை
விடியலில் கிடைக்கும் – எனவே
ஒவ்வொரு விடியலும்
அருமையாக இருப்பது
உனது உதட்டில் மட்டும் தான்
கனவு என்ற தேடலில்!
விடியல் என்ற பொழுதில்!
முடியும் என்ற முயற்சியில்!
வெல்வேன் என்ற நம்பிக்கையில்
சாதிப்பேன் சரித்திரத்தில்...

**க. செந்தில்நாதன்**
Department : **Zoology**
Year : **II - Year**



நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் **31.05.2022** மற்றும் **16.09.2022** ஆகிய தேதிகளில் நடைபெற்ற இரத்ததான முகாமில் **147** யூனிட் இரத்தம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில அளவிலான சாகச முகாம் **2022** இல் முனைவர் **செ. சித்ரா** அவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டு. ஏற்காட்டில் நடந்த சாகச முகாமில் நமது கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு சிறப்புச் சான்றிதழைப் பெற்றனர். இந்திய அரசின் குடியரசு தினவிழா அணிவகுப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக எர்ணாகுளம் – கேரளாவில் நடைபெற்ற **Pre-RD-Camp** இல் தமிழ்நாடு குழுத்தலைவராக நம் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் **செ. சித்ராவால்** அழைத்துச் செல்லப்பட்ட நமது கல்லூரி மாணவன் **ஷக்காஷ்** மற்றும் மாணவி **ஜெனிபர்** கலந்துகொண்டனர். மேலும் மேற்கண்ட இரண்டு மாணவர்களும் சென்னையில் நடந்த குடியரசு தினவிழா அணிவகுப்பில் கலந்துகொண்டு நமது கல்லூரிக்குப் பெருமை சேர்ந்துள்ளனர். கர்நாடக மாநிலம் தார்வாரில் பாரதப் பிரதமர் மாண்புமிகு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழா **2023**இல் நமது கல்லூரி **7** மாணவ, மாணவிகள் **12.01.2023** முதல் **16.01.2023** வரை கலந்து கொண்டு நமது கலாச்சார நடனம்,நாடகம் மற்றும் இசைக் கருவிகளை வாசித்துச் சிறப்புச் சான்றிதழ்களைப் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமையைத் தேடித்தந்தனர்.

சிவகங்கை மாவட்ட நேரு யுவகேந்திரா மற்றும் இந்திய இளைஞர் அமைச்சகம் சார்பாக சிவகங்கையில் 02.12.2022 அன்று நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான பேச்சுப்போட்டியில் வணிகவியல் துறை மாணவி நிலோபர் முதல் பரிசைப் பெற்றார். இவரே 05.01.2023இல் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டியிலும் முதல் பரிசினைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். “உலக யோகா தினம் **2022” 20.06.2022** அன்று காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு. **மாங்குடி** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. **75** வது சுதந்திரத் திருநாளின் அமுதப் பெருவிழாவை முன்னிட்டுத் தூய்மை இந்தியா என்பதனை வலியுறுத்தி **02.08.2022** அன்று சைக்கிள் பேரணி நடைபெற்றது. இதில் காரைக்குடி துணைக் கண்காணிப்பாளர் திரு. **வினோஜ்** அவர்களும், சிவகங்கை மாவட்ட நேரு யுவகேந்திரா ஒருங்கிணைப்பாளரும் தலைமை தாங்கினர். இதில் **275** மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு சான்றிதழ்களைப் பெற்றனர்.

சுதந்திர போராட்ட வீரர்களைப் பற்றிய விழிப்புணர்வு முகாம் **13.08.2022** அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. **மாங்குடி** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. **25.01.2023** அன்று வாக்காளர் விழிப்புணர்வு பேரணி காரைக்குடி துணைக் கண்காணிப்பாளர் திரு. **ஸ்டாலின்** தலைமையில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட நாட்டு நலப்பணித்திட்டத்தின் சிறந்த செயல்பாட்டிற்காக முனைவர். **செ. சித்ரா** அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. **ப. மதுசூதனரெட்டி** அவர்கள் சிறந்த சேவைக்கான விருதினை வழங்கினார். இதில் நமது கல்லூரி **7** மாணவ, மாணவிகள் சான்றிதழ் மற்றும் கேடயத்தை ஆட்சியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். இந்திய மருத்துவக் கழகம் மற்றும் சிவகங்கை மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய சிவகங்கை பசுமை விருது **2022** மூலமாக **10,000** மரக்கன்றுகள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நம் கல்லூரியில் நடப்பட்டன. கொரோனா தடுப்பூசி முகாம் **29.07.2022** அன்று கல்லூரியில் நடைபெற்றது.

# நுண்கலை மன்றம்

அழகப்பா பல்கலைக்கழகத்தில் 75 வது சுதந்திர தின அமுதப் பெருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற வினாடி–வினா போட்டியில் நம் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவி ரா. ராதிகா முதல் பரிசு பெற்றுள்ளார். மகாகவி பாரதியின் **140** வது பிறந்த நாள் ஓவியப் போட்டியில் மாணவர்கள் **தி. வெங்கடேஷ், வ. மாலதி** ஓவிய பாரதி விருது பெற்றனர்.

பாரதியின் பிறந்த நாளில் சிவகங்கை மாவட்ட அளவில் இளம் கவிஞர் பாரதியார் விருதிற்கான கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்று, மாநில அளவில் நம் கல்லூரி மாணவர் **அ. சம்பத்லிங்கம்** (முதுகலை வரலாறு) தேர்வானார். சிவகங்கை மாவட்ட நிர்வாகம் நடத்திய தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டியில் மாணவர்கள் **தி. லெனின்குமார்** (இளங்கலைத் தமிழ்), **ரா.ராதிகா** (முதுகலை வரலாறு) பரிசு பெற்றனர்.

சிவகங்கை மாவட்ட நேரு யுவகேந்திரா இளையோர் திருவிழா போட்டிகளில் மாணவர்கள் **தி.லெனின்குமார்** (தமிழ்), **பி. சாஜிதா பர்வீன்** (வரலாறு) பிரபு (வணிகவியல்) ஆகியோர் பேச்சுப் போட்டி, விவாதமேடை மற்றும் புகைப்பட போட்டியில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றனர். நாட்டுப்புற நடனத்தில் **எம்.கனிகாதேவி** (வரலாறு), **தி. லெனின்குமார்** (தமிழ்), **நவீன்குமார்** (ஆங்கிலம்), **ஜெகத்ரட்சகன், சேதுபதி, கிருஷ்ணகுமார்** (வரலாற்றுத்துறை), **ஷக்காஷ்** (புவியமைப்பியல்), **வருண்குமார்** (வரலாறு) ஆகிய நம் கல்லூரி மாணவர்கள் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

**26.12.2022** அன்று தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியின் நூற்றாண்டு விழா போட்டிகளில் தமிழ்த்துறை மாணவர் **தி. லெனின்குமார்** சுழற்கோப்பையைப் பெற்றார்.


கர்நாடக மாநில ஹுப்ளியில் தேசிய அளவில் பாரதப் பிரதமர் மாண்புமிகு. **நரேந்திரமோடி** அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் நமது கல்லூரி நுண்கலை மன்ற மாணவர்கள் பங்கேற்றனர். பத்து நாட்கள் நடைபெற்ற முகாமிலும் கலந்துகொண்டனர். சிவகங்கை மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற புத்தகப் பெருவிழா மற்றும் இலக்கிய விழாவில் நம் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றுப் பரிசு பெற்றனர்.

**04.02.2023** அன்று மதுரை பசுமலையில் உள்ள மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் நடைபெற்ற 'தமிழ்ச்சாரல்' விழாவில் நம் கல்லூரி மாணவர்கள் பங்குபெற்றனர்.

டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியின் 'மகளிர் தினம்' பாட்டுப் போட்டியில் மாணவி **கே.காவியா** (வணிகவியல்) பங்கேற்று மூன்றாம் பரிசு பெற்றார்.


**யா. பிலஸ்சியா**
Department : **BBA**
Year : **I Year**





**R. Dhanalakshmi**
Department : **BBA**
Year : **I Year**

**Women Empowerment**



**Dont' Let them block your freedom**

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு, புத்தாக்கப் பயிற்சி நிறுவனம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம் இணைந்து தொழில் முனைவோரின் மேம்பாட்டுக்காக நமது கல்லூரிக்கு ரூ. **10,000/-** வழங்கின. இத்தொகை மூலம் **2.3.2023** அன்று மாணவ, மாணவிகளுக்குச் சிறப்பு பயிற்சியும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் மூலம் ரூ. **1,25,000/-** பெறப்பட்டு அதற்கான மென்திறன் பயிற்சியானது அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

## பேனாவும் நானும்

என் விரல்களால்
உன்னை பிடிப்பதில்
என் படிப்பும் மதிப்பும் உயர்ந்தது
நான் படித்தவற்றை
உன்னால் என்னை எழுத வைத்தாய்
நீ இன்றி நானில்லை
கல்விக்கு கண்ணாக இருந்து
வண்ண வண்ண மை ஊற்றி
உன் வயிற்றை நிரப்பி
என் எண்ணத்தை எழுத்தாக்கினாய்
எனது இலட்சியமெல்லாம்,
பச்சை வண்ண மையில்
நான் கையெழுத்திட ஆசை,
என் ஆசை நிறைவேற
என் விரல்கள்,
உன்னிடம் தவம் கிடக்கிறது.
நீயும் நானும் ஓய்வின்றி
உழைத்தால் வெற்றி நிச்சயம்!
கவிஞர் கையிலும் நீயே
சிறு குழந்தையின் கையிலும் நீயே!
வெள்ளைத் தாளிலே
உன்னால் நான் எழுத
என் விரல்களிலே
நீ தவழ்கிறாய்
நீ, என்னை
அதிக மதிப்பெண் பெற வைத்து
மதிப்பு மிக்க பெண்ணாய்
மாற்றிவிட்டாய்
உன்னை புகழ
என் ஆயுள் போதாது
என்பேன் நான், என் பேனாவை!



**ச. அருள் ஜெனிசியஸ்**
Department : **B.Com**
Year : **I Year A**

## அம்மா...!


மூன்றெழுத்தில் கவிதை எழுத சொன்னால்
முதலில் எழுதுவேன் அம்மா என்று...!
“அம்மாவுக்கு” என்று...
கவிதை எழுதத் தேவையில்லை...
அன்பாக பழகிப் பார்...
அம்மாவே கவிதை தான்...!
ஆயிரம் வார்த்தைகள் தமிழில் இருந்தாலும்...
அடி பட்டவுடன் கதறுவது “அம்மா” என்று தான்!
எத்தனையோ விடுமுறைகள் வரலாம்...
அரசு விடுமுறை, பொது விடுமுறை என்று...
ஆனால், அவள் “சமையலறைக்கு” மட்டும்
விடுமுறையே வருவதில்லை!
“பத்து மாசம் சுமந்தாய் பக்குவமாய்.
பார்த்துக் கொள்கிறாய் பத்திரமாய்.
நீ கடவுள் தந்த வரமா...
இல்லை கடவுளாய் வந்த வரமா.”!

**சோ. நாச்சியப்பன்**
Department : **BBA**
Year : **II Year**






**Rositta. A**
Department : **BBA,**
Year : **I Year**




**S. Amala Sakaya mary**
Department : **BBA**
Year : **I Year**

## செஞ்சுருள் சங்கம்

Red Ribbon Club of our College has been functioning well. Dr. R. Rajan Ganapathy, Assistant Professor of English is the Programme Officer. Blood Donation Camps are organized every year jointly with YRC. More than 100 students donated blood during Blood Donation camp held in our college on 13.01.2023.



A one day orientation programme for First year under graduate students was organized on 30.09.2022. Mr. Nagarajan of AIDS Society and Mrs. Rebacka, Counselor, Govt Hospital, Karaikudi were the Guest Speakers. Mr. Nagarajan spoke on "How to Control AIDS" and Mrs. Rebacka on "Celebrating Life". More than 300 Students attended the Orientation programme. Earlier the arrangements were made by Dr. R. Rajan Ganapathy, Programme Officer, RRC.

## புத்தகம் பேசுகிறேன்

என்னை யாரென்று எண்ணி எண்ணி
நீ பார்க்கிறாய்...
என் பெயர் புத்தகம்
அச்சில் வந்ததால் நான்
மெச்சும் பொருளல்ல...!

என்னைப் படிக்கும் முன்
கை கழுவிப் படிக்க வேண்டும்
சில நேரம்
படித்தவுடன்
கை கழுவி விட வேண்டும்...!

கற்கச் சொன்னான்
கசடறக் கற்கச் சொன்னான்
வள்ளுவன்....!
அவன் வழி நீ சென்றால்
நீயும் நல்லவன்...!

எனக்குள் உண்டு
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
நானொரு
சாவா மூவா உயிர்ப்பு...!

யாரோ சொன்னான்
புத்தகங்களே...
கிழித்துவிடாதீர்கள் என்று...
நான் யாரைக் கிழிப்பேன் தெரியுமா?
சாதிமதத்தைக் கிழிப்பேன்
சாமியாடிக் கொண்டு
போக்சோவில் போனவனைக் கிழிப்பேன்...!
சத்திய சோதனையாய்
நான் வந்த போது
சகலமும் அடங்கிப் போனது...!

கம்பன் எனும் கவிச்
சக்கரவர்த்தி
தந்ததெல்லாம் காப்பிய
விருந்து – அதைக்
கம்பரசமாய் சாறுபிழிந்து
தமிழனுக்குத் தந்தது

என் சிறைவீடு நூலகம்...
பொழுது போகாவிடில்
வாருங்கள்
இங்கே உங்கள்
பழுது நீக்கப்படும்...!
நான் வெறும் காகிதம் அல்ல
ஆயுதம்...!

செப்பும் மொழி அத்தனையும்
என் சிந்தனைதான்...
சிந்தனைகள் அத்தனையும்
அற்புதம் தான்...!

வள்ளுவன் சொன்ன
கற்பவைக் கற்றால்
நான் போதிமரம்
இல்லா விடில்
யான் வியாதி மரம்
இப்படிக்கு...
புத்தகம்...!



**முனைவர் க. மோகன்**
ஆய்வக உதவியாளர்
இயற்பியல் துறை

யூத் ரெட் கிராஸ் அமைப்பின் சார்பாக போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு **11.08.2022** முதல் **17.08.2022** வரை நடைபெற்றது. **12.08.2022** அன்று அழகப்பா அரசு கலைக் கல்லூரியும், அழகப்பா பல்கலைக்கழகமும் இணைந்து போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கினைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா அரங்கில் நடத்தின. போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு மினிமாரத்தான் நிகழ்ச்சியில் **150** மாணவ, மாணவிகள் பங்குபெற்றனர். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி **12.10.2022** அன்று நடைபெற்றது. **19.10.2022** அன்று நடைபெற்ற இந்திய சுதந்திர தின அமுதப் பெருவிழாவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடத்தப்பெற்று அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. **13.01.2023** அன்று நடைபெற்ற ரத்ததான முகாமில் **40**க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ரத்ததானம் செய்தனர்.

## விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே!

துக்கங்கள் வந்து போகும்
வருந்திவிடாதே...!
கஷ்டங்கள் வந்து போகும்
கவலைப்படாதே.!
இவை யாவும் நிரந்திரமில்லா
மேகக்கூட்டமே..!
வானவில் கூட அழகாகத்தான்
இருக்கும் அதையும் நம்பி
ஏமாந்துவிடாதே!
விண்ணை ஆளும்
சூரியனோ.! சந்திரனோ.!
ஒன்றுக்கொன்று தாழ்வில்லை.!
அதற்காக உரிய நேரத்தில்
அதுவே விண்ணை ஆள்கிறது.!
அதை நீ மறவாதே.!
உனக்கான நேரம் வரும்
அந்நேரத்தில் நீயே ஆள்வாய்..
விண்ணையும்.! மண்ணையும்.!

**சு. கீர்த்தனா**
Department : **BBA**
Year : **I Year**






**M. Jeya Bharathi**
Department : **B.Com**
Year : **I Year**

## சமூக வலைதளம்



தொழில் நுட்பக் காலத்தில்
தொலைந்து போயின
தொன்மையான உறவுகள்!
தொடுதிரை அலைபேசியால் இன்பத்
தொல்லையாய் ஆகின
தொலைதூரத் தொடர்புகள்!
இணையத்தில் இன்பம் தேடி இம்மையின்
இனிமையான தருணங்களை
இழக்கின்றனர் இளைய தலைமுறையினர்!
வசந்தத்தை வலைதளங்களில் நாடி
வசமாய்ச் சிக்கிக் கொண்டனர்
வருங்காலச் சந்ததியினர்!
சமூக வலைதளங்கள்
சமூக இடைவெளியை உருவாக்கியது
சக மனிதனிடத்தில்!
முழு முகவரி அறியாமலே
முகநூலில் மலர்கிறது
முகமறியாதவருடன் நட்பு!
செயலிகள் பலவற்றால்
செயலிழந்து போனது
செம்மையாய்ச் சிந்திக்கும் திறன்!
கணமும் பிரியாத கையடக்கக் கைபேசி
களவாடிக் கொண்டது நம்
கற்பனை வளத்தை!
ஆன்ட்ராய்டு அலைபேசியை
ஆக்கத்திற்குப் பயன்படுத்துமா
ஆசையில் அலைபாயும் அண்மைத் தலைமுறை!!!

**சு. ஷர்மிளா**
உதவிப் பேராசிரியர்
ஆங்கிலத்துறை

# மகளிர் மன்றம்

கல்லூரியின் மகளிர் மன்றமும், **IQAC** -யும் இணைந்து ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு **Beautician Certificate Course** ஐ நடத்தி வருகிறது. **16.03.2023** அன்று நடைபெற்ற மகளிர் தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தேவகோட்டை **R. இராமநாதன்** வழக்கறிஞர், **SP. மணிகண்டன்** ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## அன்னையவள்!

குடும்பத்தில் மூத்தவள்
ஏன்
மொத்த குடும்பமே அவள்!
அன்னையவள்
பேர் வைத்து சீராட்டியவள்!
பொழுது விடியும் முன்
கண்விழிக்கும் பூமகள்!
வேளை தவறாது
விருந்தளிக்கும் அன்னபூரணியவள்!
அகிலம் ஆளும்
திறமை கொண்டவள்!
ஆனால்
விதியின் வீரியத்தால்
அக்கம் பக்கம் கூட
அறிய நேரமில்லாமல்
உழைக்க ஓடும்
அக்னி சிறகு அவள்!
தன் கனவுகளை துறந்தவள்
என் கனவுகளை நிறைவேற்ற துடிப்பவள்...!
ஆசைகள் துளிர்விடும் முன்னே
அதை அறிந்து பூர்த்தி செய்யும்
புன்னகை அரசியவள்!
அப்பாவை நினைவூட்டாமல்
அப் பாவை வளர்க்கிறாள்
என்னை...!
வெளியுலகத்தை நன்றாக கற்றவள்!
வெளியிலும் ஒரு உலகம் இருக்கிறது
என்பதை எனக்கும் கற்பித்தவள்..!
கனா காணும் நேரத்திலும்
கடனை அடைக்க என்ன
செய்வேன் என்று சிந்தனைகளை
ஓடவிடும் ஒப்பற்றவள்..!
அவளிழந்த வாழ்க்கையை
திரும்பிக்கொடுக்க முடியாததால்
அவள் எதிர்பாரா வாழ்க்கையை
பரிசளிக்க காத்திருக்கும் நான்
அவள் மகள்.!

**சு. கீர்த்தனா**
Department : **BBA**
Year : **I Year**

## விதை


கஷ்டங்கள் வரும்போது காய்ந்த இலையாய் இருக்காதே!
முளைக்கும் விதையாய் இரு!!
கஷ்டங்களை காய்ந்த இலைகளைப் போல் உதறிவிட்டு
முளைக்கும் விதையாய் முயன்று எழுந்து வா!!
தரையில் இருக்கிறோம் என்று தளர்ந்து போகாதே!!
ஒருநாள் மரமாய் உயர்ந்து நிற்பாய்!!
மண்ணில் கிடக்கிறோம் என்று மனம் தளராதே!
மற்றவர்கள் நிமிர்ந்து பார்க்கும்படி ஒருநாள் வளர்ந்து நிற்பாய்!!
வளர முடியவில்லை என்று வருத்தப்படாதே!
வானம் கூட மழையாய் வந்து ஒருநாள் உதவி செய்யும்!!
கவலைகளை ஒதுக்கி விடு!
இலட்சியங்களை கையில் எடு!!



**பெ. செல்வி**
Department : **BBA**
Year : **II - Year**

## ஏழை உழவன்

மண்ணில் விதைத்து, மதத்தை மறந்து;
மழையை எதிர்பார்த்து, மாடாய் உழைத்து;
மக்களின் பசிதீர்த்த உழவனின் நிலை... ஏழ்மை
உடலை வருத்தி, உதிரம் சிந்தி;
பயிரை வளர்த்து, பாசத்தை கொட்டி – அதை
பாதி விலைக்குப் பறித்து பங்கிட்டுக் கொள்ளும்
எமன்களின் பசி பணமென்று தெரியவில்லை
கடன் வாங்க மனமில்லை – அதை
திருப்பி தர வழியில்லை – இதை எண்ணி,
பலநேரம் பசியில்லை பசித்த பொழுது
உண்ண உழவனுக்கே உணவில்லை...
இன்று உயிரோடு நான் இல்லை – இருந்தவரை
உழவைத் தவிர வேறெதுவும் செய்ததில்லை,
என் போல் ஏமாளி யாருமில்லை,
உழவனுக்கு மட்டுமே இந்த அவலநிலை...



**ச. சுப்னா சர்மிள்ளா**
Department : **BBA**
Year : **III Year**

நமது கல்லூரி உள்தர மதிப்பீட்டுக் குழு (**IQAC**) சார்பில் கல்விசார் மற்றும் நிர்வாக தணிக்கை (**Academic and Administrative Audit**) **06.06.2022** அன்று அனைத்துத் துறைகளுக்கும் நடத்தப்பட்டுள்ளது. உள்தர மதிப்பீட்டுக் குழு சார்பில் இக்கல்லூரியில் **14.10.2022** அன்று பேராசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ் **2022 - 2023**, இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை மற்றும் அழகப்பா அரசு கலைக்கல்லூரி இணைந்து அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சியை (**In-service Training Programme**) **15.09.2022** அன்று கல்லூரி வளாகத்தில் நடத்தின.

## நீலமும் பச்சையும்

மருத்துவ அறுவை சிகிச்சை அறையில் பச்சை மற்றும் நீல நிற ஆடையை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் அணிகின்றனர். மற்ற வண்ணங்களில் அணிவதில்லை இதற்கு உரிய காரணத்தைக் காணலாம்.

மருத்துவமனை ஊழியர்கள் முதன்முதலாக வெள்ளை நிற உடையைத் தான் அணிந்தனர் இதை 1914 இல் பச்சை நிறமாக மாற்றினார் ஒரு மருத்துவர். அன்று துவங்கி இன்று வரை பச்சையும், நீலமும் உடுத்தப்படுகிறது.

சில வண்ணங்களை தொடர்ச்சியாக பார்த்தால் கண்கள் சோர்வடையும். சூரியனையோ, பளபளக்கும் பொருளையோ பார்த்தால் சோர்வு ஏற்படும். பச்சை அல்லது நீல நிறத்தை மட்டுமே உறுத்தல் இன்றி நீண்ட நேரம் தெள்ள த்தெளிவாக பார்க்க முடியும்.


நீலமும், பச்சையும் மூளைக்கு இதமானது. இதை பார்ப்பதால் நோயாளிகள் சோர்வடைவதில்லை நீலம் கண்களுக்கு இதமானது எனவே தான் மருத்துவமனையில் பச்சை மற்றும் நீலநிற உடைகள் பயன்படுத்தப்படுகிறது.

### பொது அறிவு வினாக்கள்

1. இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் **கொல்கத்தாவில்** உள்ள இந்திய தேசிய நூலகம்.
2. இந்தியாவின் முதல்பெண் நீதிபதி யார்? **அன்னா சாண்டி**
3. உலகில் எந்த நாட்டுடனும் போரிடாத நாடு எது? **சுவிட்சர்லாந்து**
4. டெல்லி நகரின் முதல் பெண் மேயர் யார்? **அருணா அசஃப் அலி**
5. உலகிலேயே மிகவும் நீளமான துறைமுகம் எது ? **நியூயார்க் துறைமுகம்**
6. புல்லட் ரயிலின் வேகம் எவ்வளவு ? **1 மணிக்கு 320 கி.மீ**
7. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆப்பிரிக்கர் யார்? **வோல் சோயின்கா**
8. இந்தியக் கடல் எல்லைக்குள் எத்தனை தீவுகள் உள்ளன?**1208 தீவுகள்**



**அ. கோகுலகாவியா**
Department : **BCA**
Year : **II Year**



காலம் கடந்து கொண்டெ
செல்கிறது ...
நாமும் காலத்தை கைப்பேசியுடன்
கடத்துகிறோம் ...
கடந்த கால நினைவுகளை காணலாம்
என திரும்பிப் பார்க்கும் போது
கண்ணீர் வருகிறது ...
காரணம்,
அங்கு கைப்பேசி மட்டுமே தெரிகிறது ...

**கா. இலக்கியா**
Department : **BBA**
Year : **I Year**

**அழகப்பா அரசு கலைக்கல்லூரி,** காரைக்குடி – 3.

| | | |
|---|---|---|
| மலர்க்குழு ஆசிரியர் | : | முனைவர் **அ. பெத்தாலெட்சுமி**<br>முதல்வர் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் **இரா. குமார்**<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை |
| உறுப்பினர்கள் | : | முனைவர் **மு. மரகதவல்லி**<br>தமிழ் உதவிப்பேராசிரியர் |
| | | முனைவர் **இரா. இராஜன் கணபதி**<br>ஆங்கில உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **க. சோமசுந்தரம்**<br>ஆங்கில உதவிப் பேராசிரியர் |
| | | திருமதி **க. கவிதா**<br>இயற்பியல் உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **எம். கருணாகரன்**<br>இயற்பியல் உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **அ. பாலசுப்பிரமணியன்**<br>கணிதவியல் உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **க. அர்ச்சுணன்**<br>கணிதவியல் உதவிப் பேராசிரியர் |


| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | **Alagappa Govt. Arts College Karaikudi - 630 003.** |
| 2. | Periodicity of its Publication | : | **Annual** |
| 3. | Language | : | **Tamil and English** |
| 4. | For whom it is circulated | : | **Among the members of the staff and students of this College.** |
| 5. | Printer's Name | : | **Sri Lakshmi Printers** |
| | Nationality | : | **Indian** |
| | Address | : | **#2A, Subramaniyapuram, 1st Street, Karaikudi - 2.** |
| 6. | Editor's Name | : | **Dr. R. Kumar** |
| | Nationality | : | **Indian** |
| | Address | : | **Associate Professor<br>Research Department of Tamil<br>Alagappa Govt. Arts College, Karaikudi - 3** |
| 7. | Publisher's Name | : | **Dr. A. Pethalakshmi** |
| | Nationality | : | **Indian** |
| | Address | : | **Principal, Alagappa Govt. Arts College, Karaikudi - 3** |

Certified that the above particulars are true to the best of my knowledge - Editor.